உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி கஅ] ரௌத்திரி-ஹூ புரட்டாசி-மீ [பகுதி கக.

Vol. XVIII. September—October-1920. No. 11.

## தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி.

தொல்காப்பியத்தின் பெருமை.

இந்நிலவுலகின்கண்ணே, மக்கட்சாதியாரால் வழங்கப் பெற்றுவரும் பாஷைகள் எண்ணிறந்தனவேனும், அவற்றுள்ளே பழமையும்பெருமையுமுடையவாய்ச் சீர்திருத்தம் பெற்றுவிளங்கும் மொழிகள் சிலவேயாம். அங்ஙனம் சீர்திருத்தம்பெற்ற பரதகண்டத்துப் பழம்பாஷைகளிலே வடமொழியாகிய ஆரியமும், தென்மொழியாகிய தமிழும் சிறந்தவையென்பது நல்லறிஞர் பல்லோரால் முன்னரே ஆராய்ந்து துணியப்பட்டது; ஆதலால் அதனை ஈண்டாராயப்புகுவது மிகையாகும். இனி அவ்விருமொழிகளுள் வடமொழியின் பழம்பெருமையை நிலைநாட்டுதற்கு அதன்பாலுள்ள வேதசாத்திரங்கள் எவ்வாறு சிறந்துவிளங்குவனவோ அவ்வாறே தென்மொழியின் பழம்பெருமையைக் குறித்தற்குரிய நூலொன்று பல்லாயிரவாண்டுகளாகத் தமிழ்மக்களாற் சேமிக்கப்பெற்றுவந்துள்ளது. அவ்வரிய பெரிய நூலாவது தோல்காப்பியமே. இப்போது வழங்கும் நூல்களிலே இதனினும் முற்பட்டதொன்று தமிழ்மொழியில் இல்லையென்றே சொல்லலாம். இதன் ஆசிரியர் "ஆனைப் பெருமை யகத்திய னென்னும்—அருந்தவ முனிவ னுக்கிய முதனூல்-பொருந்தக் கற்றுப்.புரைதப வுணர்ந்தோ"ருட் சிறந்தவரும், பார்க்கவகுலத்தவரான சமதக்கினியின் புதல்வரும், திரணதூமாக்கினியென்னும் இயற்பெயரினருமாகிய தொல்காப்பியமுனிவர்.* இம்முனிவர்பெருமான், இடைச்சங்கமிருந்த நிலந்தருதிருவிற்

* 'தொல்காப்பியன்-பழமையான காப்பியக்குடியில் உள்ளோன்' என்பது உரை; காப்பியம் என்பது பார்ப்பாரது பழைய குடிவகையுளொன்று என்பது "காப்பியத் தொல்குடி கவின்பெற வளர்ந்து" என்னுஞ் சிலப்பதிகார வடியாலும் (30—83) விளங்கும். காப்பியம்=காவியம்; கவியாகிய சுக்கிரனதுவமிசம் என்பது பொருள். இவ்வமிசத்தோர் பிருகு மஹருஷியின் மரபினராதலால், பார்க்கவர் எனவும் படுவர். பல்காப்பியனார், வெள்ளூர்க் காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார், முதலாய புலவர்களும், பார்க்கவ அல்லது காவிய குலத்தவராதல் வேண்டும், இனிக் கபிலர் என்ற புலவரின்

பாண்டியன்காலத்தவரென்பதும், தமிழ்நாட்டில்வழங்கிய உலகவழக்குச் செய்யுள்வழக்குகளையும், தம்மாசிரியர் அகத்தியனாரியற்றிய முதனூலையும் ஆராய்ந்து இலக்கணநூலொன்று இயற்றினரென்பதும், இயற்றிய தனை முற்கூறிய பாண்டியனது அவைக்களத்தே அதங்கோட்டாசான் என்ற நல்லிசைப்புலவர்கேட்ப அரங்கேற்றினர் என்பதும், பிறவும், இம் முனிவர்க்கு ஒரு சாலைமாணாக்கரான பனம்பாரனார்கூறிய பாயிரச்செய் யுளால் அறியப்படுகின்றன. இடைச்சங்கநாள்தொடங்கி நல்லறிஞர்க் கெல்லாம் பெரும்பிரமாணமாக விளங்கும் இலக்கணநூல் இத்தொல்காப் பியம் ஒன்றுமேயாம். இதன் முதனூலாகிய அகத்தியம், இடைச்சங்க காலம்வரை வழங்கியதாகத் தெரியவரினும், கடைச்சங்கநாளிலே அதன் வழக்கு வீழ்வதாயிற்று. இப்போதோ, அந்நூலிற் சிலசூத்திரங்கள் ஆங் காங்கு உரைகாரர்களால் ஆளப்படுதல் தவிர வேறு காணப்படவில்லை. இவ்வாறு "விரிகுகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்,—தாங்கா நல்லி சைத் தமிழ்க்கு விளக்காகென" அருந்தவமுனிவரான அகத்தியனாரால் ஆக்கப்பட்ட முதனூலானது முற்றும் வழக்கொழிந்ததற்கு நச்சினார்க் கினியர் வேறு கதைக்காரணங் கூறுவரேனும், அதன் வழிநூலாகத் தோன்றிய தொல்காப்பியத்தின் அருமை பெருமைகளே அம்முதனூ லின்வீழ்ச்சிக்கு முக்கியகாரணமென்று சொல்லலாம். இத்தொல்காப் பியந் தோன்றியகாலந்தொட்டு அது விதிக்கின்ற ஆணைப்படி நடப்பதை யே முன்னோரும் பின்னோருமாகிய தமிழ்மக்களெல்லாம் தமக்குரிய கௌ ரவமாகக் கொண்டொழுகினர். "கூறிய குன்றினு முதனூல் கூட்டித்- தோமின் றுணர்தல் தொல்காப் பியன்றன்—ஆணையின் தமிழறிந் தோர்க் குக் கடனே" எனப் பல்காப்பியனார் என்னும் பழம்புலவர் கூறுதலுங் காண்க (தொல். பக்-௮௦௯), இடைச்சங்கத்தில் இதனுடன் உதித்த நூல்களெல்லாம் ஏறக்குறைய இறந்தொழியவும் இந்நூன்மட்டும் இன்றுவரை நின்றுநிலவுவது தமிழ்நாட்டார்செய்த தவப்பயனேயாம்.

தொல்காப்பிய அமைப்பு.

இத்தகைய பெருமைவாய்ந்த தொல்காப்பியமானது, எழுத் ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூப் பெரும்பகுதியுடையதாய், அவ் வெழுத்துச் சொற்

---

வேறுபாடறியத் தொல்கபிலர் (குறுந்-14) என்ற புலவர் சங்கநூலிற் சிறப் பிக்கப்படுதல்போலக் காப்பியர்பலரின் வேறுபாடறிதற்குத் தொல்காப்பியர் என அடையுடன்வழங்கப்பட்டார் எனினும் பொருந்தும்; பராசரரென்ற முனிவரினின்று வேறுபாடறிதற்கு "விருத்தபராசரர்" என, வேறொருவர் வடநூலுட் கேட்கப்படுதலுங் கண்டுகொள்க,

பொருள்களின் இலக்கணங்களை விரித்துச்செல்வதாம். எழுத்துஞ் சொல்லும்-ஆராய்ந்து, அச் சொற்றொடர் கருவியாகப் பொருளுணர்ச்சிபெற வேண்டுதலால், அம்முறையில்வைத்துத் தொல்காப்பியம் அவற்றைக் கூறுவதாயிற்று. எழுத்துஞ் சொல்லும் ஆராய்ந்த மாணாக்கன் பொருளதிகாரங்கற்பது இன்றியமையாததாக முன்னோர் கருதிவந்தனரென்பது, "எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே; பொருளதிகாரம் பெறேமே எனின் இவை பெற்றும் பெற்றிலேம்" என்று களவியலுரை* நுதலிப்புகுதலால் விளங்கும். தொல்காப்பியத்தின் பகுப்பாகிய மூன்றதிகாரங்களும் தனித்தனி ஒன்பதியல்கள் உடையனவாக ஆசிரியரால் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள், பொருளதிகாரத்து அமைந்துள்ள இயல்களையும் சூத்திரத்தொகையையும் பற்றிய இரண்டு பழைய வெண்பாக்கள்† அடியில் வருமாறு:—

"ஈட்டு மகத்திணையு மெய்த்த புறத்திணையுங்
காட்டு களவியலுங் கற்பியலு—மீட்டும்
பொருளியல்மெய்ப் பாடுவமம் போற்றிய செய்யுள்
மரபியலு மாம்பொருளின் வைப்பு"

"பூமலர்மென் கூந்தால்! பொருளியலின் சூத்திரங்க
ளாவவ்று நூற்றிருபத் தைந்தாகும்—மூவகையால்
ஆயிரத்தின் மேலு மறுநூற் றறுபதென்ப
பாயிரத்தொல் காப்பியங்கற் பார்"

இவற்றாற் பொருளதிகாரவியல்கள் ஒன்பதென்பதும், சூத்திரங்கள் ௬௬௫-என்பதும், தொல்காப்பியமுழுமைக்குமுரிய சூத்திரத்தொகை ௧௬௧௦-என்பதும் விளங்குவனவாம். இப்போது பொருளதிகாரச் சூத்திரத்தொகை ௬௬௬ ஆக உள்ளது. இஃது ஒரு சூத்திரத்தை இரண்டாகக்கொண்டு உரைகாரர் பொருள்கூறியதனாற் போந்ததாம். இவ்வொன்பதியல்களில் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கும் அகப்பொருளையும், புறத்திணையியல் புறப்பொருளையும், ஏனையியல்கள், முறையே மெய்ப்பாடு, உவமம், யாப்பு, மரபுகளையும் விளக்குவன.

---

* களவியல் - இறையனாரகப்பொருள். (தொல். பக்-௭௪௮)

† செந்தமிழ். தொகுதி-2; பக்-௧௧௭.

உரைகளும் வழிநூல்களும்

இத்தொல்காப்பியம் பழைய உலகவழக்கையும், செய்யுள் வழக்கையும் இலக்கணமுறையால் விளக்குவதாதலால், அவற்றைத் தெரிதற்கு முன்னோர் இயற்றிய உரைகள் பேருதவியாவன. இவ்வுரைகளின் உதவி இல்லையேல், பெரும்பாகமும் இருண்டுகிடக்கும் தொல்காப்பியக்கடலிலுள்ள அரும்பெறன் மணிகளின் தன்மைகள் நம்மால் அளந்தறிய முடியாவாம். அதனால் அவ்வுரைகாரர் கூற்றுக்கள் மூலத்தோடொத்த பெருமையுடையனவாக மதிக்கற்பாலன. தொல்காப்பியத்துக்கு உரையெழுதியவருள், இளம்பூரணவடிகள், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் என்ற நால்வருஞ் சிறந்தோராவர். இவருள், நச்சினார்க்கினியரியற்றிய உரையே பொருளதிகாரத்துக்கு இப்போது கிடைத்திருப்பது.* ஆயின் அச்சேறிய பொருளதிகாரப்பதிப்பிலே செய்யுளியலுக்குள்ள பகுதி, நச்சினார்க்கினியரதன்றிப் பேராசிரியரியற்றியதென்பது, "செந்தமிழ் வாயிலாக முன்னரே பிரசித்தமானது.† இதுபோலவே அவ் வச்சுப்பிரதியிற்கண்ட மெய்ப்பாடு, உவமம், மரபியல்களின் உரைப்பகுதிகளும், நச்சினார்க்கினியரெழுதியன வல்லவென்பதற்குப் பல காரணங்கள் கூறுவர்.‡ ஆராய்ச்சியில் எவருரையாகமுடியினும், அவ்வுரைகள் பழமையும் பெருமையும் உடையனவாகவே காணப்படுதலால், அவற்றினுதவிகொண்டு தொல்காப்பியத்திற் கண்ட அரும்பொருள்களைத் தெரிந்துகொள்ளத் தடையில்லையாம். அன்றியும், இப் பொருளதிகாரத்துக் கூறப்பட்ட அகம், புறம், மெய்ப்பாடு, உவமம், யாப்பு, மரபு என்பவற்றின் கருத்துக்களைத் தெளிதற்குத் தொல்காப்பியத்துக்குப் பின்னரெழுந்த இறையனார்களவியல், நாற்கவிராசநம்பியகப்பொருள், புறப்பொருள்வெண்பாமாலை, தண்டியலங்காரம், வீரசோழியம், முதலிய உரையுடன்கூடிய இலக்கணநூல்களும், சங்கச்

---

* பொருளதிகாரத்துக்கு, உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் எழுதிய உரையுள் அகத்திணையியல், புறத்திணையியற்பகுதிகள் இப்போது அச்சாகி வெளியேறியுள்ளன. அவ்வுரையுட்கண்ட விசேடங்களை ஆண்டாண்டுக் கீழ்க்குறிப்பிற் காட்டியுள்ளோம்.

† இவ்விஷயம், சேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத்-ரா. இராகவையங்காரவர்களால் முதன்முதல் ஆராய்ந்தறியப்பட்டு, அவர்களால், செந்தமிழ்ப் பத்திரிகையின் 2ம் தொகுதி 11ம் பகுதியில் வெளியிடப்பட்டது. இப்போது நச்சினார்க்கினியரது செய்யுளியலுரை முழுதும் தனிப்புத்தகமாக அவர்களால் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்வாயிலாக வெளியிடப்பட்டுமுள்ளது.

‡ செந்தமிழ், தொகுதி-2, பகுதி-௧௧.

செய்யுள்களும் பிறவும் தக்க கருவிகளாக உள்ளன. ஆதலால் இவ்வாராய்ச்சிக்கு இந்நூல்களும் ஏற்றபெற்றி கொள்ளப்படுமென்க. இனி நூனுட் கூறப்படும் விஷயங்களுட் புகுவோம்.

**பொருளதிகாரம்.** பொருளதிகாரமென்பது பொருளினது இலக்கணத்தை உணர்த்தும் அதிகாரம் என விரியும். [அதிகாரம்-முறைமை] பொருளாவன-அகப்பொருளும் புறப்பொருளுமாம். அன்றி, அகத்திணையில் இன்பத்தையும், புறத்திணையில் அறம் பொருள் வீடுகளையும் ஆசிரியர் கூறுதலால் உறுதிப்பொருள் நான்கையும் இவ்வதிகாரம் உணர்த்துவதென்று கொள்ளவும் படும். (பக்-க.)

இனி, மேற்கூறிய பொருள்களையே கூறவந்த ஆசிரியர் மெய்ப்பாடு, உவமம், செய்யுள், மரபு என்பவற்றையும் சேர்த்துப் பொருளதிகாரத்துக் கூறியதென்னை? என்ற கேள்வி நிகழ்வதுண்டு. இதற்கு விடை:—தொல்காப்பியனார் எழுத்ததிகாரத்துஞ் சொல்லதிகார்த்துஞ் செய்யுள் வழக்கிற்கும், உலகவழக்கிற்கும் உரியவற்றைக் கலந்து கூறிப் பொருளதிகாரத்திற் பெரும்பான்மை உலகவழக்குக்கு வேண்டுவனவே கூறத் தொடங்கினர்: தொடங்கினவர் அவ்வுலகவழக்கை உணர்த்துவதற்குப் பெரிதும் உபகாரப்படுதலுடைய மெய்ப்பாடு உவமங்களையும், அவ்வழக்குப்பற்றிப் பாடுதற்குரிய செய்யுளிலக்கணங்களையும், உலகவழக்குச் செய்யுள்வழக் கிரண்டற்கும் பொதுவாகிய மரபுகளையும் பொருளியல்களோடு சேர்த்துக் கூறுவாராயினர் என்க. (செய்யுண் மரபியல்களின் அவதாரிகை பார்க்க.)

**அகமும் புறமும்.** இனி, ஆசிரியர் தாம் கூறப்புகுந்த பொருட்டொகுதியைத் தமிழ்மக்கள் முறைப்படி* அகத்திணை புறத்திணை என இரண்டுபகுதியாகக்கொண்டு, அவற்றுக்கேற்ப இயல்கள் வகுத்துக்கூறுவர். அவற்றுள், அகத்திணை என்பது, அகவொழுக்கம், அஃதாவது ஒத்த அன்பொடு ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்தவின்பம், அக்கூட்டத்தின்பின் இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்ப

* "தமிழின் றுறைவாய் நுழைந்தனையோ" என்னும் திருக்கோவையடியின் (20) விசேடவுரையிற் பேராசிரியர் 'தமிழின் றுறைகளாவன, ஈண்டகமும் புறமுமாகிய பொருட்கூறு." என்றெழுதுதல் காண்க. வடநூன் முறையாயின் அறம், பொருள், இன்பம் எனப் பாகுபாடுபெறுமென்பர் பரிமேலழகர். (குறள்-காமத்துப்பால். அவதா.)

முறுவதாம்; புறத்திணை என்பது புறவொழுக்கம்; அஃது ஒத்த அன்புடைய தலைவன், தலைவி இவரானன்றி, எல்லாராலுந் துய்த்துணரப்படுவதும், இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுவதுமாம். இவற்றுள், இன்பப்பகுதியான அகத்திணையானது களவு கற்பு என இரண்டாகப் பகுக்கப்பட்டு இப்பொருளதிகாரத்தே பல இயல்களால் விரிக்கப்படுகின்றது.

அகப்பொருளின் சுருக்கவரலாறு

இவற்றுட் களவென்பது ஒருவனும் ஒருத்தியும் அந்தரங்கத்திற் கூடுங் கூட்டம். இக்கூட்டம்பற்றித் தமிழ்நூல்கள் கூறும் வரலாற்றை முதலிற் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளுதல் பின்வருஞ் செய்திகளையறிவதற்குப் பெரிதும் உபகாரமாகும். அவ்வரலாறுவது:—உருவுந் திருவும் அறிவுங் குலமுமுதலியவற்றால் ஒப்புயர்வற்றுவிளங்குந் தலைவனொருவன் வேட்டையாடிக்கொண்டு மலைச்சாரலொன்றன்பக்கத்தே தனியனாய் வந்தானாக—ஆங்குத் தினைப்புனங்காத்துத் தன் தோழியரோடு விளையாடுபவளும், உரு, திரு முதலியவற்றால் ஒப்புயர்வற்றவளுமாகிய மலைவாணர்மகளொருத்தி விளையாட்டுவிருப்பாற் றோழியர் தனித்தனி பிரிந்தநிலையில், தானுந் தனியளாய் அத்தலைவன்முன்பு எதிர்ப்பட்டனள். எதிர்ப்பட, இருவரும் ஊழ்வயத்தால் உள்ளங்கலந்து அவ்விடத்தே கூடிமகிழ்ந்து, பின்னர் ஒருவர்க்கொருவர் பிரிவாற்றாது ஒருவாறு ஆற்றுவித்துக்கொண்டு தத்த மிடநோக்கிச் சென்றனர். இவ்வாறு விதியாற் கூட்டப்பட்டுப் பிரிந்த தலைமகன் தான் காதலுற்ற தலைவியைத் திரும்பக்காணுமவாவினாற் றூண்டப்பட்டு, முன்னாட்கூடிய இடத்தை நாடிச்செல்ல, அங்ஙனமே அன்புதூண்ட ஆங்குவந்தெதிர்ந்த தலைவியைத் தலைவன் எதிர்ப்பட்டுக் கண்டு மகிழ்ந்து காதலால் முன்போற் கலந்தான். இவ்விதம் மூன்று முறை கூடும்போது தன் பாங்கனால், தலைவியிருப்பிடமறிந்துசென்று அவளைச்சேர்வன். இனித் தோழியரால் எப்பொழுதுஞ் சூழப்பட்டுள்ள தலைவியை இங்ஙனமே பலகாலுந் தனியிடத்தெதிர்ப்பட்டுக் கூடுதல் அருமையாயிருத்தல்பற்றித் தலைவியைத் தடையின்றி அநுபவிக்கக் கருதியவனாய், அதற்குத்தக்க துணையாவாள் அவள் காதற்றோழியே என்பதை அறிந்துகொண்டு அவள்பாற்சென்று, குறிப்பாகவும் வெளிப்படையாகவும் தன் குறைகூறிவேண்ட, அவள் பலபடியாக ஆராய்ந்து இருவர்க்குங் கூட்டமுண்மை உணர்ந்து, பின் 'இனி நாமும் இதற்கு

உடம்படலே நலம்' என்று அவ்விருவரையும் கூட்டுதற்கு முயல்வள். இங்ஙனம் தோழியாற் பல்முறை தலைவன் கூடிவருமிடையில், தலைவியாற் காக்கப்பட்டுவருந் தினைப்புனமுற்றிக் கதிர்கொய்தலேனும் பிறகாரணமேனும் நிகழத் தலைவிக்கு அக்காவல் நீங்கி மனையகத்தே தங்கும்படி நேர்தலும், அக்காலத்து இரவில், தோழி அவ்விருவரையுங் கூட்ட முயலுவள். இங்ஙனம் நிகழும் களவொழுக்கம் முதலிற் சிறுகச் சிலர்பலர்க்குத் தெரியவந்து நாளடைவில் ஊரிற் பேரலராய் எழும்ப, அதுகாரணத்தாற் பெற்றோர் தலைவியை இற்செறித்துத் தக்கபடி காவற்படுத்துவர். அதனால் தலைமகனைக் காணப்பெறாத ஆற்றாமை தலைவிமாட்டுப் பெருகுதல்கண்டு, தோழி, இனிக் கற்புநெறிப்பட்ட இவள் இறந்துபடவுங்கூடுமென்று கருதி இதற்கு வேறு உபாயமொன்றுங் காணாதநிலையில், அவள் தலைவனையடைந்து 'இனி நீர் இவளை உடன்கொண்டுசென்று மணந்துகொள்வதேகாரியம்' என்றுகூறி, ஒருவரும் அறியாவகை தலைவியை வெளியேற்றித் தலைமகன்பாற் சேர்ப்பிக்க, அவன் அவளை உடனழைத்துக்கொண்டு, தன்னூர்நோக்கிச் செல்வன்; செல்லுமிடையில், தலைவியின்சுற்றத்தார் அக் களவறிந்துவந்து தலைவனை மேற்செல்லாவாறு தடுத்தும், அவள் தன்காதல்முழுதும் தலைவன்பாற்சார்த்திநிற்பது கண்டு 'இவள் கற்புநெறிப்பட்டாள்' என்று அறிந்துகொண்டு அவ்விருவர்க்குந் தீங்குசெய்யாது திரும்பிப்போவர்; போகத் தலைவனுடன் மகிழ்ந்துசென்று தலைவி அவனூரடைந்து வாழ்வளென உணர்க.

கற்பாவது இங்ஙனம் உடன்கொண்டுபோய தலைவன் தன்னூரிலேனும், தலைவியின் சுற்றத்தார் சம்மதித்துவேண்ட அவளூரிலேனும் விதிமுறைப்படி அவளை மணம்புரிந்து இல்லறநடாத்தலும், பின் உலகின் நிலையின்மையை யுணர்ந்து வீடுபேறு முயறலுமாம்.

அகப்பொருள்பற்றிய இருவகைவழக்குகள்

இவற்றால், வேறுசில வேறுபாடுகளுமுண்டேனும், மேற்குறித்தவாறே களவுகற்புக்களின்சுருக்கம் என்பது தெரியலாம். ஆகவே, இவ்விரண்டுபகுதிகளும் தமிழ்நாட்டாரது அநாதியானவாழ்க்கைமுறையில், விவாகத்துக்கு முன்னும் பின்னும் நிகழும் இரண்டு முக்கியநிலைகளைப்பற்றியன என்பது அறியப்படும். இவ்விருநிலைகளும் தமிழ்மக்கள் தொன்றுதொட்டுவழங்கிய உலகியல்களாய்ப், பின்னரே புலவர்களாற் சிறப்பித்துப் பாடப்பெற்றும்,

இலக்கணங் கற்பிக்கப்பட்டும் செய்யுள்வழக்கடைந்தன என உணர்க. இதனை, "உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்—வழக்கு வழிப்படுத்தல் செய்யுட்குக் கடனே" "நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்—பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என ஆசிரியரே குறிப்பித்தலால் அறியத்தக்கது. நச்சினார்க்கினியரும், "இஃது இல்லதெனப்படாது உலகியலேயாம்; உலகியலின்றேல், 'ஆகாயப்பூ நாறிற்று' என்றுழி அது சூடக்கருதுவாருமின்றி மயங்கிக்கூறினன் என்று உலகம் இழித்திடப்படுதலின் இதுவும் இழித்திடப்படும்" (பக்-ரு, ௬,) என்றெழுதினர். இவ்வாறு, இக் களவு கற்புக்கள் ஒருசார் மக்களின் வழக்கத்தோடு சம்பந்தப்படாத வெறுங் கற்பனைகளேயாயின், அவற்றின் பல்வேறு விகற்பங்களைச் செய்யுள்வழக்கோடும் உலகியல்களோடும் பொருந்தவைத்து இத்துணையளவாகப் பழையநூல்கள் எடுத்தோதா என்பது திண்ணமெனக. எனவே, பொருளதிகாரத்துக்கண்ட அகப்பொருள்பற்றிய செய்யுள்வழக்கெல்லாம் பண்டைத் தமிழ்மக்கள் கொண்டொழுகிய ஒருவகை உலகவழக்கினின்றே உற்பத்தியாகிவிரிந்ததென்பது போதரும்.

உலகவழக்கம் இனி அவ்வுலகவழக்கம் ஆதியில் எவ்வாறு அமைந்திருந்ததென்பதை முதலில் நோக்குவோம். மேற்கூறிய அகப்பொருட் சுருக்கத்தை யாராயுமிடத்து—இல்வாழ்க்கையடைவதற்கு முன் ஒருவன் ஒருத்தியை மறைவிற்கண்டு, தன்பாலுள்ள அன்பை அவட்கு வெளியிட்டுக் கூடி ஒழுகுதலும், அக்கூட்டம் வெளிப்பட்டபின் பெண்ணின் பெற்றோர் அதற்கிணங்குதலும் இணங்காராயின் அவரறியாமல் அப்பெண்ணைக் கரந்தழைத்துச் சென்று தனக்குரிய மனையாளாகக்கொண்டு வாழ்தலும் போன்றமுறை இந்நாட்டில் வழங்கிவந்தமை அறியப்படுகின்றது. எனவே, தமிழ்மக்களது பண்டையொழுக்கமானது ஒருவர்க்கொருவர் மனமொத்துக்கூடும் வேதத்துக்கண்ட காந்தருவமணம் போன்றதென்று சொல்லலாம். ஆனால், களவுக்கூட்டத்தின்பின்னர், ஒருவன் ஒருத்தியை அவள் சுற்றமறியாவகை உடன்கொண்டுபோதலும் பழையவழக்கில் நிகழ்ந்ததாகத் தெரியவருகின்றது. எனினும் தலைவியின் சம்மதம்பெற்றே அவ்வுடன்போக்கு நிகழ்வதாகச் செய்யுள் வழக்கம் மிகுந்துகாணப்படுதலால், இவ்வொழுக்கத்தை ஒருதலைக் காமமாகிய இராக்கதமுறைப்படுத்தாது ஒத்த அன்புபற்றிய காந்தருவ

முறையாகவே கொண்டனர் முன்னையோர். இங்ஙனம், செய்யுள்வழக்கிலே பழைய தமிழ் மணமுறையை எவ்வளவு சுத்தமுடையதாக முன்னோர் கூறியிருப்பினும், உலகவழக்கானது அச்செய்யுள்வழக்கினும் சிறிது வேறுபட வழங்கியிருத்தல் கூடியதேயாம்; அஃதாவது தலைவியின் உடம்பாடுபெற்றன்றிப் பெருமனும் அவள் சுற்றமறியாமல் ஒருவன் ஒருத்தியைக் கொண்டுசெல்வது முதலியனவாம். தலைவியின் உடம்பாடின்றி அவளை வலிந்துகொள்வதும் முன்பு நிகழ்ந்துவந்ததென்பதைத் தொல்காப்பியனார், "மகட்பாற்காஞ்சி" என்ற புறத்துறையால் வெளிப்படக்கூறியதோடு, "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்-ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்ற கற்பியற்சூத்திரத்தாலுங் குறிப்பிட்டனர். பிற்கூறிய சூத்திரத்தின்கருத்தாவது:— உலகியலாகிய பழைய களவுமணத்தில்* "பொய்யும் வழுவும் மிகுந்து தோன்றியதனால் அக்குற்றங்கள் நீங்கக் கற்புமுறையை ரிஷிகள் தமிழ்மக்கட்கு விதிக்கலாயினர்" என்பதாம். பழைய உலகியன்மணத்துத்தோன்றிய குற்றங்கள் என்றது-ஒருத்தியின் சம்மதம்பெற்று அவளை அன்பாற் கூடியொழுகாது நினைத்தவன் நினைத்தபடி ஒருத்தியை வலிந்துகொள்வது முதலியனவாதல் வேண்டும். ஆகவே தமிழ்நாட்டில், காந்தருவம்போன்ற ஒழுங்கான களவுமுறையன்றி, ஒழுங்கற்ற களவுமுறையாகிய இராக்கதம் போன்றனவும் முற்காலத்து வழங்கலாயின என்பது உய்த்துணரத்தக்கதாம். "மையின் மதியின் விளங்கு முகத்தாளை - வௌவிக் கொளலு மறனெனக் கண்டன்று" என்னுங் குறிஞ்சிக்கலியடிகளும் இக்கருத்தே வலியுறுத்தல் காணலாம் (௯௨). இவ்வாறு ஒழுங்கற்ற மணமுறைகளை விலக்கி ஒத்த அன்புபற்றிய காந்தருவத்தையும், அதன்பின்னர்க் கற்பினையும் ஆரியமேலோர் தமிழ்நாட்டார்க்கு நன்கு விதித்துப்போந்தனரெனவும், இங்ஙனம் விதிக்கப்பட்ட களவுங் கற்புமே இத்தொல்காப்பியத்துங் கூறப்பட்டன எனவும் உணர்ந்துகொள்க. †

---

* இம்மணம் "தமிழ்கூறு நல்லுலகத்து" வழக்காகிய ஒழுக்கத்தையே பெரும்பான்மை குறிக்குமென உணர்க.

† இராக்கதமணமானது தமிழ்நாட்டார்க்குள்மட்டுமேன்றி ஆரிய மக்களாலும் ஒரு காலத்தே பிரபலமாக அனுஷ்டிக்கப்பட்டதேயாகும். இதனை, வியாசபாரதத்தில் "எட்டாவதான ராக்ஷஸமே அறிஞர்களால் விரும்பப்பட்டதென் றறியுங்கள்........தருமசாஸ்திர மறிந்தோர் வலிந்துகொண்டு போகப்பட்டவளே சிறந்தவளென்று கூறுகின்றனர்" எனவரும் பீஷ்மர் வாக்கியங்களால் அறியலாம். (ஆதிபர்வம், பக். 104; ஸ்ரீ. ம. வி. ராமாநுஜாசாரியரவர்கள் பதிப்பு) முற்காலத்தே க்ஷத்திரியர்க்குள் இம்மணம் மிகுந்திருந்ததினால், ராக்ஷஸ விவாகத்துக்கு "க்ஷாத்ரம்" என்று ஒரு பெயர் வடநூல்களில் வழங்கியதென்பர். "காந்தர்வ ராக்ஷஸ மிரண்டும் க்ஷத்திரியர்க்குச் சிறந்தனவாதலால் இவற்றுள் இரண்டேனும் ஒன்றேனும், அரசர் செய்துகொள்ளலாம்" என மனுவுங் கூறுதல் அறியத்தக்கது, (அத். 3; சு. 26)

மேற்குறித்த கொள்கையை அடியிற்காணும் செய்திகளும் நன்குவலியுறுத்துவன. இக்களவொழுக்கமானது எல்லா நிலத்துக்கும் பொதுவாக உரியதேனும் (பக்-25. சூத்-105) குறிஞ்சியொழுக்கமாகவே பழைய நூல்கள் இதனைச் சிறப்பித்தலால் மலைநாட்டில் இவ்வழக்கு மிகுந்து வழங்கியமை உய்த்துணரப்படுகின்றது. இதற்கேற்ப, மலைவாணராகிய மக்களிடத்தே, அதன் மாதிரிகைகள் இன்றும் நன்றாகக் காணப்படுகின்றன. இம்மக்கள் நிகழ்த்தும் விவாகச் சடங்குகளை நோக்குமிடத்து, அவை, அவரது புராதன சரித்திரத்தைப் புலப்படுத்துவனவென்றும், அம்மணமுறையினின்று இராக்கதமணம்போன்றதே அவர் கொண்டொழுகிய ஆதிவிவாகமென்பது நன்கறியப்படுமென்றும், அதுவே பிற்காலத்தில் நட்புமுறையாக மாறி நடக்கலாயிற்றென்றுங் கூறுவர்.* இம்மலைவாணராவார்—கஞ்சம் ஜில்லாவிலே. கொண்டர் சவரர்களும், கோதாவரியிற் கோபிகளும், கோயம்புத்தூரில் ஊராளிகளும், திருவாங்கூர் ராஜ்யத்து முதுவர்களும், வேறுசிலருமாவர். இவரெல்லாம் விவாக நிகழ்ச்சிக்குமுன் மெய்யாகவோ பொய்யாகவோ, தாம் விரும்பியபெண்ணை ஒருவருமறியாவகை களவிற் கொண்டுசெல்வதும், கொண்டுபோமிடையிற் பெண்ணின்சுற்றத்தார்வந்து தடுக்கச் சம்பந்திகளைச்சார்ந்த இருபாலார்க்கும் போலியுத்தம் நிகழ்வதும், பின்னரே சுற்றத்தாரால் மணமுடித்துக்கொள்வதும் வழக்கங்களாக உடையர். இவருள் ஊராளிகளும் முதுவர்களும், தமிழ் முதுகுடியைச் சார்ந்தவர்களே. பிற்கூறிய முதுவரது மணநிகழ்ச்சியில், மணமகன் தான் விரும்பிய கன்னிகை தண்ணீரெடுக்கவேனும் விறகு பொறுக்கவேனும் வெளியேறும் சமயம் பார்த்திருந்து, அவளை ஒருவரும் அறியாவகைக் களவிற்கொண்டு செல்வதும், சென்று மலையின் ஏகாந்தமான பிரதேசமொன்றில், சிலவாரம் வரை கூடி வசிப்பதும், இதற்கிடையிற் சுற்றத்தார் அவளைத் தேடியுங் காணாதுபோவராயின், அவ்விருவரும் திரும்பிவந்து பெண்ணின் பெற்றோரால் மணமுடித்துக்கொள்வதும் இன்னும் நிகழ்ந்துவரும் வழக்கங்கள் என்பர்.† இம் முதுவர் குறிஞ்சிநிலத்துப் பழைய தமிழ் மக்களே

* E. Thurston's Ethnographic Notes in Southern India p. 8.

† E. Thurston's Ethnographic Notes in Southern India pp. 13. "வேடர் மறக்குலம் போலே வேண்டிற்றுச் செய்தென் மகளைக்-கூடிய கூட்டமே யாகக் கொண்டு குடிவாழுங் கொலோ" எனப் பெரியாழ்வாரும், களவிற்கொண்டு மகளிரை மணம்புரியும் வேடர் மறவர்வழக்கத்தைக் குறிப்பிடுதல் அறியத்தக்கது. (திவ். பெரியாழ். 3. 8. 5)

என்பதை, அவர் பெயரே குறிப்பிக்கும். இம்மலைநாட்டுப் புராதன மக்களிடம் பெண்கோடலை முற்காலத்தரசரும் விரும்பிவந்தனரெனவும், பெண்கொடுக்க அவர் மறுத்தனராயின், அவ்வரசர் தம் வலிகாட்டி வலிந்து கொண்டுசெல்ல முயன்றுவந்தனரெனவும், தொல்காப்பியனாரே கூறுதல் நோக்கற்பாலது. இதனை "நிகர்த்தும் மேல்வந்த வேந்தனொடு முதுகுடி-மகட்பா டஞ்சிய மகட்காஞ்சி யானும்" (பக். ௧௮௫) என்னும் புறத்திணைப் பகுதியால் உணர்க. இதன்பொருள் - "பெண்கொள்ளுதற்கு ஒத்தவனாயிருந்தும், மறுத்தலால் வலிந்துகொள்ளவந்த அரசனொடு, அப்பெண்ணுக்குரிய முதுகுடித்தலைவர் தம் மகளைச் சேர்த்தற் கஞ்சிய மகட்பாற் காஞ்சியானும்" என்பது. இதனுட்கண்ட "முதுகுடி" என்பதற்கு, நச்சினார்க்கினியர், வணிகர் வேளாளரும் பிற கலப்புச்சாதி யாருமே என்று பொருள்கூறினராயினும், மலைவாணராகிய பழைய மக்களையே அது பெரிதும் குறிப்பதாம்; என்னை? "முதுகுடிப் பிறந்த முதிராச் செல்வியை - மதிமுடிக் களித்த மகட்பாற் காஞ்சி" என இளங்கோவடிகள், இக்காஞ்சித்துறையை மலைவாணரொழுக்கமாகவே கருதுதலால் என்க. இவ்வடிகளிலே பர்வதராஜனாகிய இமவான் தன் மகள் பார்வதீ தேவியைச் சிவபிரானுக் களித்த முறையை இக்காஞ்சித் துறைப்பாற் படுத்துக் கூறியிருத்தல் கண்டுகொள்க. இத்துறைபற்றிப் புறநானூற்றில் வரும் ௩௩௬முதல் ௩௫௪வரையுள்ள 19-பாட்டுக்களை நோக்குமிடத்து, தமிழர்க்குள் ஒருகாலத்து இராக்கதமணமும் அசாதாரணமாயிருந்திருக்கவேண்டுமென்பது புலப்படத் தடையில்லையாம்; என்னெனில், ஒரு பெண்ணை வலிந்துகொண்டு செல்ல அரசர் பலர் முயன்ற செய்தி இப்புறப்பாட்டுக்களால் வெளியாகின்றது.* , இஃது இராக்கதப் பாற்படுமேயன்றிக் காந்தருவமுறைக்கு ஒவ்வாததென உணர்க.† இம் மகட்பாற் காஞ்சிக்கு உரியாரக ஆசிரியர் கூறிய 'முதுகுடி' என்பதும் தமிழ் மலைவாணருள் "முதுவர்" என்ற பகுதியார் பழைய ஒழுக்கத் தோடு இன்றுங் காணப்படுவதும்—ஈண்டுச் சிந்திக்கத்தக்கன.

* பறம்புமலைக்கரசனாகிய வேள்பாரியின் மகளிரைத் தமிழ்வேந்தர் மணம்புரியவிரும்பிக்கேட்டும், அவன் இணங்காது மறுத்தமைபற்றியே, அப்பாரியின்மலையை மூவேந்தரும் முற்றுகையிட்டு அவனையும் வஞ்சத்தாற் கொன்றனர்; இச்செய்தி கபிலர் பாடிய 109, 110, 111-ஆம் புறநானூற்றுப் பாடல்களாலும்; 'மகண்மறுத்தல்' என்னுந் துறைக்குறிப்பாலும் விளக்கமாகும்.

† கலம்பகங்களில் வரும் "மறம்" என்ற பகுதி இம் மகட்பாற் காஞ்சித் துறைபற்றியது போலும்.

இனிக் களவுக்கூட்டத்தின்பின் நிகழ்வது கற்புமுறையாகும். ஆனால், களவொழுக்கமின்றியே தனிக்கற்புமுறை முன்பு வழங்கியதில்லையென்பது, "முற்படப் புணராத சொல்லின் மையிற்-கற்பெனப் படுவது களவின் வழித்தே" (இறை. களவி) என முன்னோர் மொழிதலாற் றெரியவருகின்றது.* இக்கற்பிலே தலைவியின்பெற்றோர் கொடுப்பக் கொள்வதேயன்றி, ஒருவருமறியாமல் தலைவன் அவளை உடன் கொண்டுபோனவிடத்துக் கொடுப்போரின்றியும் சடங்கின்வழியால் அவளை அவன் மணப்பது உண்டென்பர் தொல்காப்பியனார். இக்கற்புமுறை ஆரியவருணத்தார் மூவர்க்குமே இருடிகளால் ஆதியில் நியமிக்கப்பட்டதென்றும், அவ்விதிகளைத் தங்கள் புராதனமுறையொன்றில் நின்றொழுகிவந்த தமிழர் முதலியோர்க்கும், பிற்காலத்தே அவர்கள் விதித்துப் போந்தனரென்றும், ஆசிரியரே கூறுகின்றார். இதனை "மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம் - கீழோர்க் காகிய காலமும் உண்டே" † என்ற கற்பியற் சூத்திரத்தால் (௩) அறிக. இதனால் ஆரியரது கற்பியல் விதிகளைத் தமிழர் அறிந்திராத காலமும் ஒன்றிருந்ததென்பது வெளியாம். பிற்காலத்தே ரிஷிகள் கற்புமுறையைத் தமிழர்க்கு விதித்ததன் காரணம் அவரது களவியன்முறையில் "பொய்யும் வழுவும் தோன்றிச் சீர்கெட்டதேயாம்" என்பது முன்பும் விளக்கப்பட்டது.

**செய்யுள்வழக்கம் அல்லது புலனெறிவழக்கம்**

இவ்வாறு நடைபெற்ற உலகவழக்கமே காலாந்தரத்திற் புலவர்களாற் சிறப்பித்துப்பாடப்பெறும் நிலைமையை அடைந்தது. அவ்வாறு பாடப்பட்டகாலத்தே அன்புமுறைசேராத இராக்கதமுதலிய அசுத்தபாகங்களெல்லாம் அடியோடு ஒதுக்கப்பட்டுக் காதலொத்துவிளங்கும் கந்தருவமார்க்கமே தழுவப்பட்டது. அன்றியும், கூத்தர், விறலியர் முதலியோரால் இவ்வொழுக்கம் அபிநயித்து நடித்துக் காட்டப்பட்டும் வந்தது:—"நாடகவழக்கினு முலகியல் வழக்கினும்—பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்றும் பிறவாறும் ஆசிரியர் கூறுதலால் உணர்தற்பாலதாம். நாடகம் வேத்தியல் பொதுவியல் என இருதிறப்படுமென்றும், இவற்றுள் "வேத்தியலென்பது—இவ்வகப்

---

* "உலகியல்வழக்காய்ப் பின்பு இல்லறநிகழுங் களவொழுக்கம்" என நச்சினார்க்கினியர் எழுதுதலுங் காண்க. (கலித் 136 உரை)

† இச் சூத்திரத்துக்கு நேர்பொருள் இதுவேயாயினும், நச்சினார்க்கினியர்கருத்து வேறாதல் அவருரைநோக்கி யுணர்க.

பொருள்பற்றிய கூத்தென்றும் கூறுதலுங் காண்க (சிலப். பக்.—௮௮), களவொழுக்கம்பற்றிய செய்திகள் நாடகத்துக்கும் ஏற்றனவே என்பது "இத்தமிழ் நாடகத்தமிழ் எனப்படும்; களவி ஒழுங்குபடக் கோத்துக் கதைபோலவந்து நாடகத்துக் கேற்றலின்" எனத் தஞ்சைவாணன் கோவையுரைகாரர் கூறுவதாலும் விளங்குவதாம். இங்கேகூறிய நாடகமென்பது, வடமொழியிற் பாத்திரங்களும் பிறவும் வகுத்துவழங்கும் சாகுந்தளமுதலிய நாடகம்போன்றதன்றிக் கதை தழுவிக் கூத்தர் கூத்தியரால் அபிநயித்து நடிக்கப்படும் கூத்தென உணர்க. நாடகம் கதை தழுவிவரும் கூத்தென்பர் அடியார்க்குநல்லார் (சிலப்-பக்-௯௪). இங்ஙனம் களவொழுக்கம் பற்றிப் புலவர்பாடுவதும், அபிநயித்து நடிப்பதும் பல்கி எல்லைகடந்த காலத்தே அவற்றுக்கு வரம்பாக முன்னோர் இலக்கணம் வகுக்கலாயினர். இத்தொல்காப்பியமும் அவற்றுள் ஒன்றும். இதன் பொருளதிகாரப் பகுதியிலுள்ள ௯ இயல்களிலே இரண்டொன்று நீங்க ஒழிந்தனவெல்லாம் அகப்பொருள்பற்றிய வழக்குகளை வரையறுப்பதையே பெருநோக்கமாகக் கொண்டன. அறமும் பொருளும் பயக்கும் அரசியல் முதலியவற்றை உணர்த்தற்குப் புறத்திணையியல் என ஒன்றே கூறி, ஒருவனும் ஒருத்தியும் கூடும் கூட்டம்பற்றிய விதிகளைப் பலவியல்களால் ஆசிரியர்கூறுவதை நோக்குமிடத்து, அவர்காலத்தே இவ்வின்ப ஒழுக்கத்துக்கிருந்த வழக்குமிகுதி தெரியவருகிறது. ஒருகால், இவ்வொழுக்கத்தைச் சிறப்பிக்கவேண்டித் தொல்காப்பியனாரே புதியவாக இலக்கணங்கள் கட்டிக்கொண்டாரோ எனின்—பாயிரத்தில் "முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப்—புலந்தொகுத்தோன்" என்று இவர் செய்தி கூறப்படுதலால் அது முற்றும் பொருந்தாதாம். நச்சினார்க்கினியரும் "இப்புலனெறிவழக்கினை இல்லதினியது புலவரால் நாட்டப்பட்டதென்னுமோ எனின்—இல்லதென்று கேட்டோர்க்கு வெய்ப்பாடு பிறந்து இன்பஞ்செய்யாதாகலானும், உடன் கூறிய உலகியல்வழக்கினை ஒழித்தல்வேண்டுமாகலானும், அது பொருந்தாது" (பக்-௯௮) என மறுத்துக் கூறுதல் அறியத்தக்கது. எனவே களவு கற்பென்று வகுக்கப்பட்ட அகப்பொருள் விகற்பங்கள் புனைந்துரைவகையாற் புலவர்கள் பாடிவந்த உலகியல்களே என்பது வெளிப்படையாம். இங்ஙனம் புனைந்துரையும் உலகியலுங் கலந்து புலவர்பாடிய செய்யுள்வழக்கை-ஆசிரியர் "புலனெறி வழக்கம்" என்று ஆளுவர் (சூத்-௫௩); புலன் நெறிவழக்கம்—நூல் நெறி வழக்கம்; "புலத்துறைமுற்றிய" என்புழிப் போல.

இனி, இப்புலனெறிவழக்கைக் கூறுதற்கமைந்த பொருளதிகாரத்திற் பெரும்பாகம் அகப்பொருளை பற்றியதாயினும், சிறப்பாக அப்பொருளை உணர்த்தவந்த இயல்கள் நான்காம்; அவை-அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்பன. இவற்றுள், அகத்திணையியலில், புலனெறிவழக்கின் பொதுவிதிகளும், பொருளியலிற், களவியல், கற்பியல்களிற்கண்ட வழக்கை அமைத்துக்கொள்ளுமாறுங் கூறப்படுகின்றன. முதலிற் பொதுவிலக்கணங்களை அறிந்துகொள்ளுதல் இன்றியமையாதாதலின், அவற்றின் முக்கியச்செய்திகளை ஈண்டு ஆராய்ந்துகொள்வோம். பொருளியலிற்கண்ட பதினன்கு வழுவமைதிகளும்—களவு கற்பு வரலாறுகள் கூறுமிடத்துப் பெரும்பாலும் விளக்கப்படும். ஆக நாம் இவ்வாராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட பகுதிகள்—பொதுவிதிகள், களவியல், கற்பியல்-என மூன்றும் என உணர்ந்துகொள்க.

## I. போதுவிதிகள்.

அகப்பொருள்பற்றிய இன்ப வொழுக்கங்கள் ஆசிரியரால் மூன்று வகையாக வகுக்கப்படுகின்றன. அவை கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்பன.

கைக்கிளை:—தலைவன் தலைவி யிருவர்க்குள் ஒருவரிடமே தோன்றி விளங்குங் காதல். [கைக்கிளை—சிறுமை உறவு அல்லது ஒரு மருங்கு பற்றிய கேண்மை.] இஃது ஒருதலைக்காமம் எனப்படும்.*

ஐந்திணை:—அவ்விருவர்க்குள்ளும் ஒத்துவிளங்குங் காதல்; [ஐந்திணை ஐந்துபகுதிப்பட்ட ஒழுக்கம். இது பின்னர் விரிக்கப்படும்.] இஃது ஒத்தகாமமாம்.

பெருந்திணை:--தலைவன் தலைவியர்க்குள் அளவுகடந்து, இழிவான செய்கைகளுக்கு ஏதுவாகிய காதல். [பெருந்திணை—பெரிய ஒழுக்கம்.] இஃது ஒவ்வாக்காமம் எனப்படும்.

## I. கைக்கிளை.

இனி, முதலிற்குறித்த ஒருதலைக்காமமாகிய கைக்கிளைநிகழுமிடம் தொல்காப்பியத்தில் மூன்றுவகையாகக் கூறப்படுகிறது. [1] காமஞ்

* "பெருமையில்லாத தலைமக்கள் உறவு" என்பர் இளம்பூரணர் (பக்-4).

சாலா இளமையாளிடம் நிகழ்வது (சூத்-௫௦). அஃதாவது-காமக்குறிப் பிற்குப் பொருந்தாத* பேதைப்பருவத்துப் பெண் ஒருத்தியிடம் ஒரு தலைவன் தன்காதற்குறிப்புத்தோன்றக் கூறுவது. [2] ஒத்த அன்பின ராய ஒருவனும் ஒருத்தியும், ஊழ்வசத்தால், தம்முள் எதிர்ப்பட்டுக் கூடும் இயற்கைப்புணர்ச்சிக்கு முன் தலைவனிடம் பெரும்பான்மை நிக ழும் காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்ற நான்கு செய்திகளும் (62) [3] வேதத்தே கூறப்பட்ட எண்வகைமணங்களுள், கொல்லேறுகோடல்† வில்லேற்றுதல் முதலியன செய்துகொள்ளும் ஆசுரமும், தலைமகளா லும் அவள் தமராலும் பெறாது வலிதிற்கொள்ளும் இராக்கதமும், மூத் தோர் களித்தோர் முதலியவருடன் கூடுதலாகிய பைசாசமும் ஆகும். [சூத்-௧௦௫.]

இவ்வாறு கூறப்பட்ட கைக்கிளைப்பகுதிகள் முற்கூறியபடி தலை வன் தலைவி யிருவருள் ஒருவர்மாட்டே அன்பு நிகழ்ந்து ஒருதலைக்காம மாதல் கண்டுகொள்க. இதன் வகையில் காமக்குறிப்பில்லாப் பேதைய ரிடம் நிகழும் கைக்கிளையொன்றும் ஆசிரியர் முதற்கண் எடுத்தோதுத லால், தமிழ்நாட்டிற் சிறுமிகளைவிரும்பிவந்தவழக்கும் முன்பு இருந் ததுபோலும். இக்கைக்கிளையைச் சிறப்புடையதொன்றாக உரைகாரர் கூறுதலும் நோக்குக. கலித்தொகை ௫௬, ௫௭, ௫௮-ம் பாட்டுக்கள், இவ் வொருதலைக்காமவகையைச் சிறப்பித்துக்கூறுவன. நாற்கவிராச நம்பியார், தம் மகப்பொருளில் இக் கைக்கிளைப்பகுதியை அகப்புறமென் றும், காமஞ்சான்றவளிடம் நிகழ்வதே அகத்திற்குரித்தாம் என்றும் கூறுவர் (ஒழி-௧௨). *இனி, ஆசுர இராக்கத பைசாச மணங்களையும் ஆசிரியர் இப்பகுதியிற் சேர்த்தலால், இவை அவர்காலத்தே பொருந்தாக் காமமாகக் கொள்ளப்படாது ஒருவாறு தழுவப்பட்டமை புலப்படுகிறது. இவை இருவரிடத்துமன்றி ஒருவர்பாலே நிகழுங் காமமாதல் காண்க. இனிச்செய்யுள்வழக்கிற்குப்பெரிதுஞ்சிறப்புடையது இயற்கைப்புணர்ச் சிக்குமுன்னிகழுங் காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்னுங் கைக்

---

* வேட்கை பிறவாப் பருவத்தாளைப் 'பேதை' என்றும், பிறக்கின்ற பரு வத்தாளைப் 'பெதும்பை' என்றுங் கூறுவது வழக்கு. "பேதையல்லை மேதை யங் குறுமகள்-பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென்" (அகம்-௭) என்னும் இடங் காண்க. (சிந்தா-இலக்க. ௧௫௨).

† கொல்லேறுகோடல்-கொடிய விடை தழுவி மணத்தல்.

கிளையே யென்பது கோவை முதலிய நூல்களால் நன்கறிந்தது. இராமபிரானும் சீதாபிராட்டியும் - வின் முறிக்கப்படுவதன்முன் ஒருவரையொருவர் கண்டு விழைவுமிகுத்தனர் என்று வான்மீகிமுனிவர் கூறாதிருப்பவும், கம்பநாடர், தாம் பாடும் தமிழ்முறைக்கேற்ப, அவ்விருவர்க்கும் உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்ததாக, சந்தர்ப்பங்கொண்டு இக்கைக்கிளைவகையைச் சிறப்பித்தல் காணலாம் (மிதிலைக்காட்சிப்படலம்). இனி முல்லைநிலத்தாயர்க்குள் வழங்கிய 'ஏறுகோடற்கைக்கிளை' என்பதொன்று நூல்களிற் கூறப்படுகின்றது. ஏறுகோடல் என்பது - ஆய்க்குலத்தலைவர் தம்மகளிர்க்குக் கன்னியாசுல்கமாகக் கொல்லேறு (விடை) ஒன்றைவெளியேற்றி இதனைத் தழுவுவானுக்கே இவளுரியள் என்று நியமிப்பதாம். "ஆசுரமாகிய இவ் வேறுகோடற்கைக்கிளை, காமப்பொருளாகிய புலனெறிவழக்கில்வருங்கால் முல்லைநிலத்து ஆயரும் ஆய்ச்சியரும் கந்தருவமாகிய களவொழுக்கம் ஒழுகி வரைபுங்காலத்து அந்நிலத்தியல்பு பற்றி வரைந்துகொள்வர்" என்பர் நச்சினார்க்கினியர். இதன் விவரம் முல்லைக்கலியின் முதலிரண்டுபாட்டுக்களால் உணரலாம். இக்கைக்கிளை அவ்வாயர்குலமுதல்வனாகிய கண்ணபிரானாலும் அக் குலமகளாகிய நப்பின்னைபொருட்டு நிகழ்த்தப்பட்டதென்பர். "ஈட்டியவெண்ணெய் தொட்டுண்ணப் போந்திமி லேற்றுவன்கூன் - கோட்டிடையாடினை கூத்தடலாயர்தங் கொம்பினுக்கே" என்றார் பெரியாரும். இனி ஈண்டுக் காட்டிய கைக்கிளை மூவகையுமின்றிக் கடவுளரிடத்து நிகழும் ஒருதலைக்காமமும், முற்காலத்து ஒத்த அன்பினராயிருந்து பிற்காலத்தே ஒருவன் ஒருத்தியைத் துறக்க - அதனால் நிகழும் பெண்பாற் கைக்கிளையும், பிறவும் உளவாயினும் அவையெல்லாம் அகப்பொருட் குரியனவன்றிப் புறப்பொருட் பகுதிகளாமென்பர். (பக். ௨0௯)

---

குறிப்பு:—இது, வித்வான் ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்களால் எழுதப்பட்டதிலிருந்து சிறிது பிரசுரிக்கப்பட்டது. முழுதும் புத்தக ரூபமாக விரைவில் வெளிவரும்.

உ

# "தொல்காப்பியர் சைனராம்."

செந்தமிழிலே (தொகுதி-18, பகுதி-9, பக்கம்-337) ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் "தொல்காப்பியரது சமயம்" என்ற பொதுமொழியிட்டெழுதிய விஷயத்தைக் கண்ணுற்றுச் சிலவற்றை எழுதுகின்றேன்.

பனம்பாரனார் இயற்றியருளிய தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்திலே படிமை என்று வந்திருக்கின்றது எனவும், அச்சொல் ஜைனமதத்தினர்க்குரியது எனவும், அதுகொண்டு தொல்காப்பியரும் ஜைநமதத்தினராவர் எனவும் பிள்ளையவர்கள் கூறுகின்றனர்.

படிமை என்ற சொல் ப்ராகிருதத்திற் படிமா எனவும் வடமொழியிற் ப்ரதிமா எனவும் வழங்கிவரும் உண்மையை வல்லார்வாய்க் கேட்டுணர்வது பிள்ளையவர்களுக்குக் கடமையாகும். உரையாசிரியரும் "படிமை என்பது ப்ரதிமா என்னும் வடமொழித்திரிபு, அது தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கண் செய்தமைத்த தேவர்மேல் வந்தது" எனக் கூறிப் போந்தமையும் பிறவும் மேற்காட்டியவற்றை வலியுறுத்தும்.

"ஏனோர்படிமைய" என்று பொதுப்படப் பிரயோகித்திருத்தலைக் கொண்டாவது பிள்ளையவர்கள் தங்கள்கூற்றுப் பொருந்தாதிருத்தலை அறிவார்களாக.

வேதத்தினையும் வேள்வியையும் மிகப்போற்றிவந்த இரும்பொறை என்பானையும், "கூறினை பெருமநின் படிமையானே" எனச் சான்றோர் சிறப்பித்ததுகொண்டு சைனனைப் பிள்ளையவர்கள் கோடல்வேண்டும். பரிமேலழகர், நச்சினார்க்கினியரையும் அங்ஙனமேகோடல் பிள்ளையவர்களுக்கு இனி ஆவசியகமாகும். பிறவுமன்ன.

(தொடரும்).

நவநீதகிருஷ்ணபாரதி.

ஸ்ரீ:

# "தொல்காப்பியரது சமயம்"

"தொல்காப்பியரது சமயம்" என்ற ஆராய்ச்சியொன்று சென்ற ஆடிமாதச் செந்தமிழில் திருவனந்தபுரம் ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமத். வையாபுரிப் பிள்ளையவர்களால் வெளியிடப்பட்டது. அதில் "பல்புகழ் நிறுத்த படிமையோன்" என்ற தொல்காப்பியப் பாயிரத்துள் படிமை யோன்" எனத் தொல்காப்பியர் வழங்கப்பட்டமையால், படிமை யென்ற சொல்லுக்கு ஜைனர்க்குரிய தவவொழுக்கமே பொருளாகுமென்று கொண்டும், டாக்டர் பர்ணல் என்பவர், ஐந்திரவியாகரண ஆராய்ச்சியில் "தொல்காப்பியர் பௌத்தராகவேனும் ஜைனராகவேனும் இருத்தல் வேண்டும்" எனக் கூறியிருப்பது கொண்டும் தொல்காப்பியர் ஜைனரா யிருக்கவேண்டுமென்று தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

படிமையென்பது ஜைனசமயத் தவவொழுக்கத்துக்குமட்டும் சிறப்புப்பெயராகாது வைதிகசமயத் தவவொழுக்கத்துக்கு முரியபெயரா மென்று, பதிற்றுப்பத்தின் (74) "கேள்விகேட்டுப் படிவமொடியாது, வேள்வி வேட்டனை யுயர்ந்தோருவப்ப......கூறினை பெருமநின் படிமை யானே" என்ற பாடலில் படிமையென்றது வைதிகசமயத் தவவொழுக் கத்தை யுணர்த்தியிருப்பதைக் குறிப்பாய் எடுத்துக்காட்டி ஸ்ரீமத். நவநீதகிருஷ்ணபாரதியார் மறுத்துரைத்திருப்பது பொருத்த முடையதே.

இப்பாட்டினுள்ளே முதலடியுள், படிவம் என்ற சொல்லும் வைதிக விரதத்தை யுணர்த்தியிருக்கிறது. இரண்டற்கும் பிரகாரம் என்னும் பண்பையுணர்த்துமிடைச் சொல்லாகிய 'படி' என்பதே பகுதியாயிருக் கிறது. இப்பகுதியே (விகுதி புணர்ந்துகெட்டு) பெயராய்நின்று நிறுக் கும் எடைக்கல்லையும் அளக்கும் நாழியையும் உணர்த்துதலால் அப் பகுதிக்கு ஒரு பொருளை வரையறுத்துக்காட்டும் பிரகாரமாகிய பண் புடைமையே செம்பொருளாமென் றறியத்தக்கது. "படியெடுத்துரைத் துக்காட்டும்படித்தன்றுபடிவம்" என்றார் கம்பரும். (உருக்காட்டுபடலம் 38.) குடியாம்தன்மையைக் குடிமை என்பதுபோலப் படியாம்தன்மையும் படிமை எனப்படும்.

இது தொல்காப்பியத்துள் அகத்திணையியலின் 28ம் சூத்திரத்தில் "மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய" என வழங்கப்பட்டிருக்கிறது. இதனுரையில், "ஏனோர் படிமைய" என்பதற்கு "முற்கூறிய அந்தணர் அரசரையொழிந்த வணிகர் தமக்கு விரதங்களுடையவாக" என்று பொருளெழுதி, விரதமாவன கொள்வதூஉம் மிகைகொள்ளாது, கொடுப்பதூஉம் குறைகொடாது பலபண்டம் பகர்ந்து ஈதல் முதலியன" என விளக்கப்பட்டிருக்கிறது. இதனால் "ஏனோர்" என்றது இங்கு வணிகர் என்றும், "படிமை" என்றது அவர் (வணிகர்) எப்படியிருக்கவேண்டுமோ அப்படியிருத்தலாகிய அவரது சொரூபமென்றும் வெளியாய்விட்டமையால், படிமை என்பதற்கு, சைனர் தவவொழுக்கமே செம்பொருளாகாதென்றும், பொதுவாக யார் எப்படியிருக்கவேண்டுமோ அப்படியிருக்குமியல்பே செம்பொருளாமென்றும் வெளியாகின்றது.

இவ்வியல்பினையே சிறப்பியல்பெனவும், சொரூபமெனவும், இலக்கணமெனவும் வழங்குவர். இதனால் "படிமையோன்" என்பதற்குச் சொரூபமுடையோன் என்பதே செம்பொருளாயினும் பாயிரத்துட் கூறப்பட்ட ஆசிரியனுக்குச் சொரூபம் (நியமம்) தவவொழுக்கமாதலால் அது இங்குக் குறிப்பாற் கொள்ளப்பட்ட பொருளாயிற்று. ஆகவே படிமையோன் என்ற பிரயோகங்கொண்டு தொல்காப்பியர் சைனரெனத் துணிதல் கூடாதாயிற்று.

தொல்காப்பியனார் இன்ன சமயத்தினரெனப் பிறிதோராற்றானும் துணியப்படாமலும், உரைகாரர் முதலிய பெரும்புலவர்களாலெழுதப் படாமலுமிருந்தால், பிள்ளையவர்கள் இவ்வாராய்ச்சியிற் புகுந்தது ஒருவாறு பொருந்துவதாகும். அங்ஙனமில்லையென்பதைப் பின்வரும் விஷயங்களாலுமறியலாம்.

ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்கள் அரிதிற் பரிசோதித் தச்சிட்ட தொல்காப்பியச் செய்யுளியலுரையின் முகவுரையில் அவர்களாராய்ந்தெழுதியிருப்பது வருமாறு.—

"தொல்காப்பியமென்பது தொல்காப்பியனாற் செய்யப்பட்டதென்னும் பொருட்டு; இத் தொல்காப்பியனார் சமதக்கினி புதல்வரென்றும், திரணதூமாக்கினி என்னும் இயற்பெயரையுடையரென்றும், அகத்தியர்

வடக்கணின்று தென்றிசைப்போதுகின்றபோது இவரை உடன்கொடு போந்தாரென்றும், நச்சினார்க்கினியர் பாயிரவுரைக்கண் உரைத்தார். அவர் தொல்காப்பியன் என்பதற்குப் பழைய காப்பியக்குடியினுள்ளோன் என்று ஆண்டுக்கூறினர். இவற்றாற் றொல்காப்பியனென்பது இவர் குடிபற்றி வழங்கியபெயரென்றும் திரணதூமாக்கினியென்பது இவரியற் பெயரென்றுந் தெளியலாகும். அந்தணாருமறை முதலாகிய வடமொழியினுள்ள தொன்னூல்கள் பலவற்றினும் "காவியகுலம்" என்பதோர் பழைய குடிப்பெயர் வழங்கப்படுகின்றமை அம்மொழிவல்லார் நன்கறிப. காவியர் கவியின்வழியினரென்ப; கவி சுக்கிரனுக்கு ஒரு பெயர். இவர் பிருகு மஹாருஷியின்மரபினராதலால், பார்க்கவர் எனவும் வழங்கப்படுவர். சமதக்கினியும் அவர் புதல்வரும், பிருகுவம்மிசியராதலாற் பார்க்கவரென்றும், அவரே கவிவம்மிசியராதலாற் காவியர் என்றும் பெயர்பெறுப. வான்மீகிபகவானும் பாலகாண்டத்துப் பிருகு மஹாருஷியின்பத்தினியைக் "காவியமாதா" என்று வழங்கினர். காவியமாதா என்பது காவியர்க்குத் தாய் என்றவாறு. இதனாற் சமதக்கினிபுதல்வரான திரணதூமாக்கினியின்குலம் காவியகுலமாதல் நன்குணரலாம். இது பழமைபற்றி விருத்தகாவியகுலமென்று வழக்குப்படுமென்று கருதலாகும். இது தமிழிற் றொல்காப்பியக்குடி என்று வழங்கப்படும். இக்குடியிற்பிறந்து சிறந்ததனாற் குடிப்பெயரே பெயராக வழங்கப்பட்டதென்க. பனம்பாரனார்கூறியபாயிரத்தும் "தொல்காப்பியனெனத் தன்பெயர்தோற்றி" எனக் கூறுதலால் தன் பெயர் குலப்பெயரேயாக விளக்கஞ்செய்தார் என்பதே கருத்தாதல் காண்க. 'இது முப்பாலாசிரியர் வள்ளுவர் எனப் பெயர்சிறந்ததுபோல்வ தொன்று" என்பதாம்.

இதனால், தொல்காப்பியர் வேதத்தில் வழங்கிய பழமைவாய்ந்த பிருகுகுலத்திற் பிறந்த ஜமதக்னிமுனிபுத்திரரான வைதிகமுனிவரென நன்கறியலாகும்.

இன்னும், அவர்கள் காட்டிய "டாக்டர் பார்ணல்" என்பவரெழுதிய ஐந்திர வியாகரண ஆராய்ச்சிக்குறிப்பானது அவ்வைந்திரவியாகரணவாராய்ச்சியாலேயே பாதிக்கப்படுவதாம். எங்ஙனமெனில்? "ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்" என்ற தொடர்மொழிக்கு, "இந்திரனாற்

செய்யப்பட்ட ஐந்திரவியாகரணத்தினை நிறையவறிந்தவர்". எனப் பொருளெழுதப்பட்டிருக்கிறது. ஐந்திர வியாகரணம் வேதாங்கமாய் வைதிகசமயத்தாருக்குமட்டும் உடம்பாடாய் ஓதியுணரப்பட்டுவந்த தென்பதும், அவைதிகசமயத்தாராகிய சைனர்முதலாயினோரால் ஓதி யுணராது அநாதரிக்கப்பட்டதென்பதும் பின் வருவனவற்று லறியலாம்.

திருநாவுக்கரசுநாயனார்தேவாரத்துள், திருவாரூர்த்திருத்தாண்டகத்தில் "இந்திரத்தையினிதாக ஈந்தார் போலும்" என ஒரு பூருவவிருத்தாந்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அது காலகதியாற் கற்கமுடியாது கடுமையடைந்திருந்த ஐந்திரமென்னும் வடமொழிவியாகரணத்தைச் சிவபிரான் பாணினிமுனிவர்க்கு இனிதிற்கற்கும்படி யெளிதாக்கி வகுத்துரைத்த வரலாறுமென் றறியக்கிடக்கிறது. அப் பாணினீயம் இக்காலத்தில் வேதாங்கமாக வைதிகரால் ஓதப்பட்டுவருதலால் இப்பாணினீயத்துக்கு முதனூலான ஐந்திரவியாகரணமே பாணினீயம் தோன்றுத முற்காலத்தில் வேதாங்கமாக வைதிகராற் பயிலப்பெற்றுவந்ததென்பது பெறப்பட்டது.

இனி, அவைதிகராகிய சைனரால் ஐந்திரவியாகரணம் விரும்பிக் கற்கப்படாது அநாதரிக்கப்பட்டிருந்ததென்பதும் பின் வருவனவற்றாலறியலாம்.

சிலப்பதிகாரத்துள், காடுகாண்காதையில், மாங்காட்டு மறையோன் கூற்றினுள் (98, 99) "புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின், விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்" என்பதனால், "புண்ணிய சரவணமென்னும் பொய்கையிற் படிவீராயின் இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திரவியாகரணமென்னு மிலக்கணத்தை உணர்வீர்" எனத் திருமாலிருஞ்சோலைமலையிலுள்ள தீர்த்தவிசேடச்சிறப்பைக் கோவலனுக்குச் சொல்லாநிற்க அவைதிகநெறியொழுக்கால் அது கேட்கப்பொறாத கவுந்தியடிகள் மறுமொழியாக மறையோனை யோனஞ்செய்து கூறிய கூற்றினுள், "கப்பத் திந்திரன் காட்டிய நூலின், மெய்ப்பாட் டியற்கை விளங்கக் காணாய்" என ஐந்திரவியாகரணம் அநாதரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அடியார்க்குநல்லார் "தேவர்களினும்வைத்து ஆயுக்கற்பத்தினை மிகவுடைய இந்திரன் ஞேற்றுவித்த வியாகரணத்தினை எம்முடைய அருககுமரன் அருளிச்செய்த பரமாகமங்களிற் காண்கின்றிலேயோ; அஃது துளதாக நின் புண்ணியசரவணம் பொருந்துதல்வேண்டா" என உரை

யெழுதியிருத்தலால் வேதாங்கமாயுள்ள ஐந்திரவியாகரணப்பயிற்சி அவைதிகரால் அநாதரிக்கப்பட்டிருந்ததென நன்கறியலாம்.

இவ்வாறாக ஐந்திரவியாகரணப்பயிற்சி அவைதிகரால் அநாதரிக்கப்படுவதற்குக் காரணம், அவர்களுக்குப் பயன்படாத வைதிகப்பிரயோகத்துக்குரிய வேதலக்ஷணங்களையும் மந்திராக்ஷரஸ்வர விதிகளையும் விரித்துரைத்திருத்தலேயாம். ஆதலால் அவைதிகர்கள் வேதவழக்கு விதிவிரவாத பிறவியாகரணங்களையும் அவருள்ளும் ஜைநர் விசேடமாக "ஜைநேந்திரம்" என்னும் வியாகரணத்தையும் பயில்பவராயிருந்திருக்கிறார்கள். இப்படியிருந்தமையால் "ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்" என்று, அவைதிகனைக் கூறுவது தகுதியுடைத்தாகாது. வைதிகனைக் கூறுவதே தகுதியுடையதாகும்.

இன்னும், நான்மறை முற்றிய, வதங்கோட் டாசாற் கறிறபத் தெரிந்து" என்றதில், தெரிவோனாகிய அதங்கோட்டாசான் சதுர்வேத பாரங்கதனென்று சொல்லப்பட்டமையால் அவற்குத் தெரிவிக்கும் தொல்காப்பியனாரும் வேதவேதாங்கபாரங்கதரென்பது பெறப்படும்.

இன்னும் தொல்காப்பிய நூலுள்ளும் உரைகளுள்ளும் புகுந்தாராய்வார்க்குத் தொல்காப்பியர் வைதிகோத்தமரெனத் துணிதற்கு "உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான" என்றற்றொடக்கத்துச் சூத்திரங்களும் அவற்றினுரைகளுமாகிய பிரமாணங்கள் பலவுள்ளன. அவையெல்லா மீண்டுரைப்பிற் பெருகுமென விடப்பட்டன.

திரு. நாராயணையங்கார்.

பத்திராதிபர்.

௨

# உரைகாரர்களும் அண்மைவிளியும்.

சென்ற ஆனிமாதச் செந்தமிழ்ப்பத்திரிகையில், 'அண்மைச் சொல்லே இயற்கையாகும்' என்ற தொல்காப்பிய விளிமரபுச்சூத்திரம் நான்கு உயிரீற்றுச்சொற்களுக்குமட்டு முரிய விதியாமென்றும் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் என்னு மூன்றுரைகாரர்களும் அவ்வாறே பொருள்வரைந்துள்ளார்களென்றும் எழுதி

னேன். இதனைப் பத்திராசிரியரவர்கள் மறுத்து மேற்கூறிய மூன்றுரையாசிரியர்களும் அங்ஙனங்கொள்ளவில்லையென்ற தம்முடிபை நிலைநிறுத்துதற்குப் பலபல விசாரணைசெய்தார்கள். மூன்றுரைகளையும் வாசித்தமாத்திரையில் உண்மை யெதுவென்றறிதல் எளிதாயிருத்தலின், இவ்விஷயம்பற்றி பின்னுஞ் சில வெழுதுதல் அனாவசியகமாகும். உரைகாரர்களது கருத்து தமது கக்ஷிக்கு விரோதமாயுள்ளதென்றதனை நன்குணர்ந்தே இவனியார் என்னும் புறப்பாட்டாராய்ச்சியெழுதிய மாணவரவர்களும் தொல்காப்பியச்சூத்திரத்தினையெடுத்துக்காட்டியவிடத்து அதனுரைகளைப்பற்றி யாதுங் கூறாது விடுத்தார்கள்.

மேலேசுட்டிய மூவரன்றியும் வேறிருவர் சொல்லதிகாரத்திற்கு உரையிட்டுள்ளார்கள். இவ்விருவருள், பேராசிரியரது உரையைப் பத்திராசிரியரவர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். அவ்வுரையையும் அதுபற்றி அவர்கள் கூறியிருப்பனவற்றையும் பின்னர் ஆராய்கின்றேன். ஐந்தாவது உரைகாரராகிய *கல்லாடரதுகருத்தை முதலில் தருகின்றேன். அவருரை வருமாறு:—

'அண்மைச்சொல்லே யியற்கையாகும்' "என்னுதலிற்றோவெனின், எய்திய தனிலக்கிப் பிறிதுவிதிவகுத்தல் நுதலிற்று: மேற்கூறியவாறன்றி இன்னுழி யியல்பாமென்கின்றமையின் மேற்கூறிய வுயிரீறுநான்கினையுமுடைய அணியாரைக் கூவுஞ்சொற்கள் இயல்பாய் விளியேற்குமென்றவாறு. உ-ம் நம்பிவாழி, நங்கைவாழி, வேந்துவாழி, கோவாழி எனவரும்."

இவ்வுரையினின்றும் கல்லாடரதுகருத்து மிகத் தெளிவாய் விளங்குகின்றது. இளம்பூரணராகிய வுரைகாரர்களோடொப்ப, இவரும் இச்சூத்திரம் நான்கு உயிரீற்றுப்பெயர்களுக்குமட்டும் ஏற்புடையதொரு விதியாமென்றே கொண்டனர். மெய்யீற்றுப்பெயர்களை இதனுட்கொண்டிலரென்றுகூறுதல் மிகை. இங்ஙனமாக, ஆராய்ச்சியிற்சிறந்த நான்கு உரைகாரர்கள் வேறுபாடின்றி யொரேமுகமாகக் கிழவோன் அண்மைவிளிபெறுதற்கு இச்சூத்திரம் ஆதாரமாகாதென்னுங் கருத்தினராயுள்ளார்கள்.

இனி, பேராசிரியருரையினையும் அதுபற்றிப் பத்திராசிரியரவர்கள் கூறியிருப்பனவற்றையுஞ் சிறிது சென்றுநோக்குதல்வேண்டும்.

---

* கல்லாடரது உரையையும், பேராசிரியரது உரையையும், இளம்பூரணரது உரையையும், எனது அன்பார்ந்த சகோதரர் ஸ்ரீ வ-உ-சிதம்பரம்பிள்ளையவர்கள்மூலமாய்ப் பெற்றேன்.

எனக்குக்கிடைத்த பேராசிரியருரைப்பிரதி தஞ்சை ஸரஸ்வதி மஹாலிலுள்ள பிரதியினின்றும் எடுத்தெழுதி யனுப்பப்பட்டது. அதன் கண்ணுள்ளதைக் கீழே தருகின்றேன்.

'முன்மைச்சொல்லே யியற்கையாகும்' 'இத்திணைக்கண்வரு மெல்லாவீற்றுப்பெயரு மன்மைக்கண் விளியேற்குமாறுணர்த்து. இச்சூத்திர முழுவதும் பின்னு நோக்கிநிற்றலிற் சிங்கநோக்காகிக் கிடந்ததென்று கொள்க. மேற்சொல்லப்பட்ட வுயிரீற்றுப்பெயரு மினிப்போதுகின்ற புள்ளியீற்றுப்பெயரு..............ப்பெயரு மன்மைக்க ணியல்பாகி விளியேற்கும்; னகரவீறு சிறப்புவிதிபெறுதலின் அஃதொழிந்த வேனையகொள்ளப்படும்.'

'நம்பிவாழி, நங்கைவாழி, வேந்துவாழி, கோவாழி, மாதர்கூறு, அண்ணல்கூறு,.............. தம்பிகூறு, அன்னங்கூறு, கானல்கூறு எனவரும். பிறவுமன்ன. 'ஆவுமானியற்பார்ப்பனமாக்களு" மென்பது மன்மைவிளி.'

இப்பாடத்திற்கும் பத்திராசிரியரவர்கள் பதிப்பித்த பாடத்திற்கும் சிறிது வேற்றுமையுண்டு. உரையில் 'புள்ளியீற்றுப் பெயரு' மென்பதனையடுத்துச் சிலவெழுத்துக்கள் மறைந்துபோயினமை தெரிதற்குச் சிறிது இடம் விடப்பட்டிருக்கிறது. உதாரணங்களில், 'அண்ணல்கூறு' என்பதற்கும் 'தம்பிகூறு' என்பதற்கும் இடையே ஓருதாரணம் விடுபட்டுபோயினமை காட்டுதற்கு இடந்தரப்பட்டிருக்கிறது.

பிறவுரையாளர்களோடு மாறுபட்டுப் பேராசிரியர் சூத்திரவுரை வகுத்துள்ளாரென்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. இச்சூத்திரத்தினைச் சிங்கநோக்காகக்கொண்டமையும் உரையால் வெளியாகின்றது. ஆனால் வியவகார காரணமாயுள்ளது எவ்வீற்றுச்சொல்லோ அவ்வீற்றுச்சொற்கள் சம்பந்தமானவரையில் இப்பேராசிரியருரைக்கும் பிறவுரைகளுக்கும் சிறிதும் வேறுபாடில்லை. ஐயப்பாட்டிற்குச் சிறிதும் இடமின்றி, நுணுக்கவாராய்ச்சியால் திரித்துக்கொள்ள முடியாதபடி, 'னகரவீறு சிறப்புவிதிபெறுதலின் அஃதொழிந்த வேனைய கொள்ளப்படும்' என்று மிகத் தெளிவாக உரை காணப்படுகின்றது. ஆகவே 'கிழவோன்' என்ற னகரவீற்றுச்சொல் இயற்கை யுண்மை

விளியாமெனற்கு 'அண்மைச் சொல்லே இயற்கை யாகும்' என்னும் சூத்திரம் ஆதாரமாகாதென்பதே பேராசிரியர்க்குங் கருத்தாதல் நன்கு அறியப்படும்.

இங்ஙனமாகப் பேராசிரியருரையினாலேயும் தமதுகக்ஷி அநுகூலமடையவில்லையென்பது கண்ட பத்திராசிரியரவர்கள் அவ்வுரைப் பகுதியில் தமக்குப் பிரதிகூலமாயுள்ளன இடைச்செருகலென்று கூறத் துணிந்தார்கள்.

பேராசிரியருரையை ஆதாரமாகக் காட்டினவர்கள் பத்திராசிரியரவர்களாம். அவ்வாறு காட்டினமாத்திரையானே இப்போதுள்ள உரைரூபமுற்றிலும் நம்பி யங்கீகரிக்கத்தக்கதாயிருக்கவேண்டுமென்பது போதருகின்றது. இதற்கு மாறாகத் தமக்கு உறுதுணையெனக்கொண்ட ஆதாரத்தின்கண்ணே இடைச்செருகலுளதெனக் கூறுவதாயின், அவ் ஆதாரந்தான் எத்துணை வலியுடையதென்று எடுத்துச்சொல்லவும் வேண்டுமோ? உரைரூபத்திற் சிறிதேனுஞ் சந்தேகமேற்படுமாயின், அதனை யாதாரமாகக்காட்டுதலிற் பயனுமில்லை; அஃது அங்கீகாரயோக்யமு மாகாது. அன்றியும், இடைச்செருகலிருப்பதாயேற்படுமாயின், எவையெல்லாம் அவ்வாறுள்ளனவென்று துணிந் தறிதல்வேண்டும். உண்மையுரையென்றுகொள்ளும் ஒவ்வொருபகுதியும் பரிசோதனையால் இடைச்செருக லன்றென்பது தெளிவிக்கப்படுதல்வேண்டும். 'சிங்க நோக்கு' என்ற கருத்தும் அதற்கு அநுகூலமாயிருக்கும் ஒருசிலவும் இடைச்செருகலல்லவென்பது ஒருதலையாகத் தெளிவிக்கவேண்டும் பொறுப்பு அவர்கள்பாலதாம். இப்பொறுப்பைப் பத்திராசிரியரவர்கள் நிறைவேற்றவில்லை.

இலக்கண வுரைபோன்ற விசேஷநூல்களில் (Technical works) இடைச்செருகலுளதாதல் மிகவும் அரிதாம். இவ்வகை நூல்களிற் சிலபிரதிகளையும், இராமாவதாரப் பிரதிகளிற் சிலவற்றையும் ஒப்புநோக்கினர்க்கு, இக்கூற்றின் உண்மை வெளிதிற் புலப்படும். இலக்கண வுரைகளிலேயும் இடைச்செருக லுளதென்பதற்கு உரையாசிரியருரையிற் சிலபகுதிகளைப் போலியுரையெனச் சேனாவரையர் நிறுவுதலை ஆதாரமாகத் தருகின்றார்கள். ஆனால் 'போலியுரை' எனப்படுவதன்கருத்து இடைச்செருகலன்றென்பது யாவரு

ணன்கறிந்ததேயாம். ஆசிரியர்கருத்தினைப் பிழைபடவுணர்ந்து தவ றாகக்கொண்டபொருளே போலியுரையென்று கூறப்படுவது. இங் ஙனமிருப்பவும் 'போலியுரை' யென்று சேனாவரையர் முதலியோர் கூறியதனை இடைச்செருகலுண்மைக்கு ஆதாரமாகக்காட்டியது தமி மூலகத்திற்கு என்றும் வியப்பாகவே இருக்கும். இதுநிற்க; விசேஷ நூல்களுள்ளும் எழுதுவாரும் படிப்பாருமின்மையால் இங்ஙன மோ ருரையுண்டென்பதுதானும் தமிழ்மக்கள் வெகுகாலமாக அறியா திருந்த வோருரையின்கண்ணே இடைச்செருகல் காணப்படுதல் அரி தினுமரிதாம்.

இங்கே கூறியவற்றால், பேராசிரியருரையில் இடைச்செருக லுளதென்னும் பத்திராசிரியரவர்கள் கூற்று மிகுதியும் ஐயப்பாட் டிற்கு ஹேதுவாயிற்றெனல் அறியலாகும் அதிலேயும் உரை யில் எப்பகுதி தம்கக்ஷியைப் பொய்படுத்துவதோ அப்பகுதியே இடைச்செருகல் என்று அவர்கள் கூறும்போது ஏற்கனவே நிகழ்ந்த ஐயம் வலியுற்று அவர்கள் கூற்றின் நொய்ம்மையை வெளி யாக்குகின்றது. எனினும் இடைச்செருகல்தா னென்பதற்குப் பத்தி ராசிரியரவர்கள் தரும் நியாயங்களை ஆராயவேண்டுங் கடமை யென் பாலுளது. 'னகரவீறு சிறப்புவிதிபெறுதலின் அஃதொழிந்தவேனைய கொள்ளப்படும்' என்று பேராசிரியருரையிற் காணப்படுகின்றது. ணகரவிற்றுச் சொற்களுக்குரிய அண்மைவிளிச் சிறப்புவிதி விளிமர பின்கண் இல்லையாதலின் பேராசிரியர் அங்ஙனம் கூறார் என்பதும், 'அண்மைச் சொல்லிற் ககர மாகும்' என்ற சூத்திரம் சிறப்புவிதியாத லில்லை யென்பதும் பத்திராசிரியரவர்கள் கூறும் நியாயம். இச்சூத் திரம் சிறப்புவிதியாகுமென்று பேராசிரியர் கருதியுள்ளாராவென் னும் விஷயமே முதலில் ஈண்டாராய்தற்குரியது; பிறிதன்று.

இதனை நிச்சயித்தற்குப் பத்திராசிரியரவர்கள் இடைச்செருக லெனத் தள்ளாது பேராசிரியரது உரைதானென ஒப்புக்கொண்ட வுரைப்பகுதியே தக்க கருவியாகக் கொள்ளற்பாலது. பிறிதொன் றனைக்கொண்டால் அதனையும் இடைச்செருகலெனல் அவர்கட்கு மிக எளிது. அவர்கள் ஒப்புக்கொண்டவற்றில் அண்மைச் சொல் லிற் ககர மாகும்' என்றதன்கீழ்க் காணப்படும் எய்தியது விலக்கி மேலதற்கோர் புறனடை புணர்த்துதல் நுதலிற்று' என்றவாக்கியமு

மொன்று. இவ்வாக்கியத்தின் உண்மைப்பொருளை விசாரிப்பதனால் மட்டுமே, பேராசிரியரது கருத்து வெளியாகக்கூடும். எவ்விதியினு லெய்தியதனை விலக்கிற்றென்றும் மேலதற்கு என்றது எச்சூத்திரத் தினை யென்றும் நோக்குதல்வேண்டும்.

முதலாவதாக 'மேலதற்கோர் புறநடை' யென்பதை யெடுத்துக் கொள்க. உரைகளில் இவ்வாறு வருமிடங்களையெல்லாம் நோக்கு வோமாயின், அது எச்சூத்திரம்பற்றி யெழுந்ததோ அதற்கு நேரே யடுத்து முன்புள்ள சூத்திரத்தினையே உணர்த்துவதாக இருக்கிறது. இவ்வித முணர்த்தவில்லையெனின், 'மேலதற்கு' எனக் குறிப்பிட்டு ஒன்றனைக் கூறுவதனாற் பயன் யாது மின்றாம். நச்சினார்க்கினியர் இத்தொடரைச் சொல்லதிகாரத்தில் 10 முறை யெடுத்தாண்டுள்ளார் (சூ-21, 36, 96, 114, 273 277, 408, 428, 443, 454). ஈண்டெல்லாம் அவ்வச்சூத்திரங்களுக்கு அடுத்து முன்புள்ள சூத்திரங்களையே அது குறிப்பதாகும். இங்ஙனமன்றி முன்புவந்துள்ள பிறிதொரு சூத்திரத்தினை இச்சொல் சுட்டுவதாதல் பண்டையுரைகளில் யாண்டு மில்லையாம். ஆகவே 'எய்தியது விலக்கி மேலதற்கோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று' என்ற வாக்கியத்தில் மேலதற்கு என்ற சொல்லாற் குறிப்பிடப்பட்டது சந்தேகத்துக்கிடனின்றி நிச்சய மெய்துகின்றது. தமிழ்ப்பாஷையிலுள்ள சொற்களுக்குப் பொருள் நியதி யுண்டாயின், பேராசிரியர் பொருள்நியதி யறிந்து சொற்களைப் பிரயோகித்திருப்பாராயின் 'மேலதற்கு' என்றசொல் இவ்விடத்தில் 'அன்னென்னிறுதியாவாகும்மே'என்றதனையே குறிக்கவல்லது; பிறி தொன்றனையும் குறிக்கமாட்டாது.

இனி, புறநடையென்பதன் கருத்து யாதென அறிதல்வேண்டும். உரைகாரர்களது பிரயோகங்களை யுற்றுநோக்கினால் அஃது இரண்டுவகையானுணரப்படுவது காணலாம். (i) ஒரு சூத்திரத்தின் ஆணைசெல்கின்றவிடத்துப் புறநடைச்சூத்திரத்தின் ஆணையும் உட னிகழ்ந்து விதியை முற்றுவிக்கும்; உதாரணமாக, 'அவையல்கிளவி மறைத்தனர்கிளத்தல்' என்ற சூத்திரத்தினையும் அதற்குப் புறநடை யாகவந்த 'மறைக்குங்காலை மரீஇயதொராஅல்' என்ற சூத்திரத் தினையும் நோக்கி இதனுண்மை தெளியலாம். (ii) சூத்திரத்தினானே

செல்லாதொழிந்துநின்றவிடத்துப் புறநடைச்சூத்திரத்தின் ஆணை நிகழ்ந்து இலக்கணத்தை முற்றுவிக்கும். உதாரணமாக 'இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி-பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே' என்ற சூத்திரத்தினையும் இதற்குப் புறநடையாகவந்த 'அசைநிலைக் கிளவி யாகுவழி யறிதல்' என்ற சூத்திரத்தினையும் நோக்கி யுணர்க. 'அதிகாரப்புறநடை' என்றவிடத்தெல்லாம் இவ் இரண்டாவது பொருளினையே நெறிப்பட விரித்துணர்கின்றோம்.

'மேலதற்கு' என்றதன் பொருளொடுபொருந்தப் 'புறநடை' யென்பதற்குப்பொருள்கொள்ளப்படுதல்வேண்டும். இங்ஙனம் கொள்ளுங்கால் இரண்டாவதுபொருளே ஏற்புடையதாயமையும். 'அன்னென்னிறுதி' யென்பது அண்மைச்சொல்லிற்குச் செல்லாது. அங்ஙனம் செல்லாத அண்மையிடத்து 'அண்மைச் சொல்லிற்கு அகரமாகும்' என்றதன் ஆணை நிகழ்ந்து, அன்னீறுபற்றிய இலக்கணத்தை முற்றுவிக்கிறது. ஆதலால், 'புறநடையெனின் அன்னீறெல்லாம் அண்மைக்கண் ஆகாரத்திரிவும் உடன்பெறவேண்டும்' என்று கூறுவது பொருந்தாது. மேலைச்சூத்திரத்திற்குப் புறநடையாகக் கொண்டு 'அண்மைச் சொல்லே இயற்கையாகும்' என்றதனாலெய்தியதனை விலக்குவதாகக்கூறின், சிங்கநோக்கு "இடையிட்டு மறைக்கப்பட்ட பிறவீற்றிலும் செல்லாதொழியும்" என்று பத்திராசிரியரவர்கள்கூறுவதும் பொருந்தமாட்டாது. ஏனெனில், சிங்கநோக்குச்சூத்திரத்தினையடுத்து உயர்திணை மெய்யீறுகளனைத்தும் ஒருங்கு கூறப்படுதலின், இடையிட்டு மறைப்பதற்கு யாது மில்லையாம்.

இனி 'எய்தியது விலக்கி' என்றதனை 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்றதன்கீழ்க் காணப்பட்டபோது எவ்வாறு வியாக்கியானித்தார்களோ (செந்தமிழ்-XVII-8- பக். 376 முதல்) அவ்வாறு செய்யாது, அதன் உண்மைப்பொருளை (பொதுவாக முன்வந்த சூத்திரமொன்றினாற் பெறப்பட்டதை விலக்குதல் என்பதனை)த்தந்ததற்குத் தமிழுலகம் கடப்பாடுடையதாகின்றது. 'அளபெடைமிகூஉமிகரவிறுபெயர் - இயற்கையவாகுஞ்செயற்கையவென்ப' வென்பது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுப்பது (நச்). இது மூன்றுசூத்திரங்களுக்குமுன்புள்ள 'இ ஈயாகும்; ஐ ஆயாகும்'

என்ற சூத்திரத்தா லெய்தியதனை விலக்கியது. ஆதலாற் பொதுவாக முன்புவந்த சூத்திரமொன்றனை இத்தொடர் குறிக்கவல்லதென்பது அறியலாகும். 'மேலதற்கோர்புறநடை'யென்பது 'அன்னென்னிறுதி யாவாகும்மே' என்ற சூத்திரத்தினையல்லது பிறிதொருசூத்திரத்தினையுங் குறிக்கமாட்டாதாதல் மேலே நன்குபெறப்பட்டமையின், 'எய்தியதுவிலக்கி' என்பது 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்னுஞ்சூத்திரம்பற்றியே யெழுந்ததாகும். இச்சூத்திரம் சிங்கநோக்காக நிற்பதென்பது பேராசிரியர்கருத்தாதலால் அது மெய்யீற்றிற்கும் சேருவதாய்முடிய, ணகரவீறு சம்பந்தமானவரையில் அவ்வாறெய்தியது விலக்கப்பட்டது. இங்ஙனம் பொதுவிதியைவிலக்கிப் பிறிதொருவிதிவகுத்தலினாலே 'அண்மைச்சொல்லிற்ககரமாகும்' என்பது சிறப்புவிதியாமென்றலே பேராசிரியரது கருத்தாய்முடிந்தது.

ஈண்டெழுதியவற்றால் 'ணகரவீறு சிறப்புவிதிபெறுதலின் அஃதொழிந்த ஏனையகொள்ளப்படும்' என்று பேராசிரியருரையிற்காணப்படுவது அறியாதாரது இடைச்செருகலன்றென்பதும் முன்பின்வாக்கியங்களாற் றெளியப்பட்ட அவரது கருத்தோடு முற்றும் பொருந்துவதாமென்பதும் நன்குணரலாகும். 'அண்மைச் சொல்லிற் ககரமாகும்' என்பது அன்னீற்றுச் சிறப்புவிதியாமேயன்றி ணகரவீற்றுச் சிறப்புவிதியெனல் பொருந்தாதாகலின், பேராசிரியர் அங்ஙனமெழுதார் என்கிறார்கள். விளிமரபில் ணகரவீற்றில் அன்னிறுதிச்சொற்களும் ஆனிறுதிச்சொற்களுமே கொடுக்கப்பட்டுள்ளன. 'ணகரவீறு சிறப்புவிதிபெறுதலின்' எனப் பேராசிரியருரையிற்காணப்படுவதால் இவையிரண்டும் சிறப்புவிதிபெறுதல்வேண்டும். இவற்றுள் அன்னிறுதி சிறப்புவிதிபெற்றமை மேலெழுதியவற்றால் தெளியப்பட்டது. ஆனிறுதியும் சிறப்புவிதிபெற்றுளதாவென்பது ஆனிறுதிபற்றிய சூத்திரங்களுக்குப் பேராசிரியர்கூறிய வுரைநோக்கியே துணியப்படுதல்வேண்டும். அங்ஙனம் நோக்காது ணகரவீறு சிறப்புவிதி பெறவில்லையெனப் பத்திராசிரியரவர்கள் கூறுவது பொருந்தாது. மேலும் அன்னீறொன்றே அண்மைவிளியேற்றற்குரியதென்பது பேராசிரியர்கருத்தாயினு மாகலாம். இவையெல்லாம் விளிமரபுச்சூத்திரங்களனைத்திற்கும் பேராசிரியருரை வெளிவந்தபின்னரே நிச்சயிக்கற்பாலது. இவ்வுரையை வெளிப்படுத்து நிச்சயஞ்செய்தலே

பொழிந்து பேராசிரியர்கருத்தை பொருவாக்கியங்கொண்டே அறிய முயலுதல் நியாயமுறையன்றாம்.

உரை கிடைத்த அளவில் 'னகரவிறு சிறப்புவிதிபெறுதலின்' என்பது பேராசிரியர்கருத்தேயாகுமெனற்கு வேறு சான்றும் உளது.

'அண்மைச் சொல்லே இயற்கை யாகும்' என்ற சூத்திரத்தின்கீழ் னவ்விற்றுதாரணம் கொடுக்கப்படவில்லை. உயர்திணை உயிரீறும் மெய்யீறும் சம்பந்தமானவரையில் உதாரணங்களைப் பூர்த்தியாகத்தருதலே பேராசிரியர் கருத்து. முதலாவதாக உயிரீற்றுதாரணங்கள் நான்கும் தருகின்றார். பின் 'ணரலள' என்னும் நான்கு மெய்யீற்றுதாரணங்கள் தரப்படுதல்வேண்டும். 'கோவாழி' யென்பதனை படுத்து 'மாதர்கூறு' என ரகரவீறு காணப்படுகின்றதேயன்றி ணகரவீற்றுதாரணமில்லை. இதன்பின் லகரவீறுவரல்வேண்டும்; அவ்வாறே 'அண்ணல்கூறு' என்ற உதாரண முளது. இதனையடுத்து ளகரவீற்றுதாரணம் வேண்டும்; இதற்குரிய இடம் விடுபட்டிருக்கிறது. இம்முறையை நோக்குமிடத்து னகரவீறு சிறப்புவிதிபெறுதலின் அஃதொழிக்கப்பட்டது என்ற கருத்து, பேராசிரியரதேயாதல்வேண்டுமென்பது உறுதியடையவில்லையா? ளகரவீற்றுதாரணம் காணப்படாமைப்பற்றி அவ்விற்றினைவிலக்கல் பேராசிரியரதுகருத்தெனல் பொருந்தாதவாறுபோல், னகரவீற்றுதாரணம் காணாததுபற்றி அதனை விலக்கினரென்றல் சரியன்றெனின், அங்ஙனமன்று. ளகரவீற்றுக்குரியவிடம் தஞ்சைப்பிரதியில் விடுபட்டிருப்பதே பேராசிரியருரையில் ளகரவீறு உதாரணங்காட்டப்பட்டிருந்தமைக்குச் சான்றாம். னகரவீற்றுதாரணம் கொடுக்கவேண்டும் நிலையில் இடம் விடப்படவில்லையென்பது அறியத்தக்கது. உயிரீற்றுதாரணங்களொழிய ஏனையுதாரணங்களெல்லாம் இடைச்செருகலாமென்று கூறி, அறியாதார்கை நண்டுத் தெளியக்கிடத்தலாலே இடைச்செருகல்மிகுதியும் உளதென்பதைக் குறிப்பிற் பெறவைக்கிறார்கள். ஆனால் தஞ்சைப்பிரதியை நோக்குமிடத்து உண்மை யொருவாறு அநுமானிக்கக்கூடியதாயிருக்கிறது. அதில் "மேற்சொல்லப்பட்டவுயிரீற்றுப் பெயருமினியோதுகின்ற புள்ளியீற்றுப்பெயரு............ப்பெயருமண்மைக்க ணியல்பாகிவிளியேற்கும்" என்று காணப்படுகிறது. இத்

தொடரில் எழுத்துக்கள் மறைந்திருப்பதையும் உதாரணங்கள் காட்டப்பட்டிருப்பதையும் உத்தேசித்தால் 'மஃறிணை' யென்பது விடுபட்டுப்போயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. வேறு பிரதிகள் நோக்கியே இதன் உண்மையறியவேண்டியதாயிருப்பினும் "அவற்றை (i.e. அவ்வுதாரணங்களை) ஈண்டமைத்தற்கேற்ற குறிப்பு ஒன்றுமில்லை"யென்று பத்திராசிரியரவர்கள்கூறுவது பொருந்தாமையறியலாம்.

இவ்வாறாகத் தஞ்சைப்பிரதி சிலவுண்மைகளைத் தெரிவிப்பதாயிற்று. பேராசிரியருங்கூட 'அண்மைச் சொல்லே இயற்கை யாகும்' என்ற சூத்திரம் னகரவிற்றுப்பெயர்கட்கு உரியதன்றெனக்கொண்டமை தெளிவாகின்றது. ஆகவே தொல்காப்பியச்சொல்லதிகாரத்திற்கு உரைகண்டவர்களுள் ஒருவரேனும் 'கிழவோன்' என்பது இயற்கையண்மைவிளியெனற்கு 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்ற சூத்திரத்தினை ஆதாரமாகக்கொள்ளுங்கருத்துடையாரல்லர். தெளிவானவாக்கியங்களை நுணுகிநுணுகிச் சென்று வேண்டும்பொருள் பெறவைத்தும், அவ்வாறும் வியாக்கியானஞ்செய்தொழிக்கக்கூடாததனை இடைச்செருகலெனவொதுக்கிவைத்தும், உரைகாரர்கள் கூறாததனையவர்கள் கூறினார்களெனக் காட்டுமுயல்வது பெரிதும் விசனிக்கத்தக்கதாம். இவ்வாறு செல்லாது உரைகாரர்கள் அனைவரும் பிழைபோயினார்களென்று பத்திராசிரியரவர்கள் கூறியிருப்பின், அக்கூற்று எல்லாராலும் போற்றற்குரியதாய் நன்கு மதிப்புப் பெறும். ஆனால், தொல்காப்பிய முழுமையு நன்கு கற்று அதன் பொருள் செல்நெறியையும் (method of exposition) ஊன்றிநோக்குவார்க்குப் பேராசிரியரொழிந்த ஏனையுரைகாரர்கள் இவ்விடத்தில் உண்மையுரையினையே கூறியுள்ளார்களென்பது வெளியாகுமென நினைக்கிறேன். 'தொல்காப்பியமும் அதன் உரைநெறியும்' என்ற விஷயம் தமிழ்மக்கள் எல்லாராலும் நன்கு ஆராய்ந்தறிதற்குரியது.

S. வையாபுரிப்பிள்ளை,

திருவனந்தபுரம்.

---

# மதிப்புரை.

---

அகலிகைவெண்பா:—இது, சென்னை ஸிவில்வெற்றரிசெரி இலாகா பென்ஷன் டிப்டி ஸூப்பரின்றென்றென்றும், மதுரைத்தமிழ்ச்சங்கத்து வித்யாவிஷய ஆலோசனைச் சபையங்கத்தினருமாகிய ஸ்ரீமான். வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்களால் இயற்றப்பட்டது. சொல்வளமும் பொருள்வளமும் மிக்குள்ளது. மூன்று காண்டத்தில் 246 செய்யுளுடையதாகப் பாடி முடிக்கப்பட்டிருக்கிறது. இப்பதிப்பில் அகலிகை வெண்பாவசனமும் குறிப்புரையும் படிப்பவர்க்கு இனிது விளங்கும்படி நன்றாய் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்கள் இந்நூலுக்கு அளித்துள்ள முகவுரையாலும், இதனுடன் சேர்த்திருக்கும் துண்டுப்பத்திரத்தாலும் மற்றும் பல புலவர்கள் கொடுத்துள்ள அபிப்பிராயங்களாலும் தனிப்பாடல்களாலும் இந்நூலின் பெருமை இனிதுவிளங்கும். செய்யுளியற்றுவதிலும், உரைநடை யெழுதுவதிலும் இந்நூலாசிரியர்க்குள்ள திறமை அவர்கள் இயற்றிய சுவர்க்கநீக்கமுதற்காண்டம், கோம்பி விருத்தம், நெல்லைச்சிலேடைவெண்பா; (கல்விவிளக்கம் முதற்பாகம்,) ஜான்மில்ட்டனார் சரித்திரம் முதலியவற்றாலும் விளங்கும். இந்நூல், தமிழ்ப்பெருவள்ளலும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதியும், ஆன மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் ராஜா இராஜராஜேஸ்ர முத்துராமலிங்கஸேதுபதியவர்களுக்கு உரிமைசெய்யப்பட்டிருக்கிறது. நல்லகடிதத்திற் றிருத்தமாய் அச்சிடப்பெற்றது. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

---

# அன்பின் நிலை.

சகல ஜீவராசிகளிடத்தும் ஊடுருவி விளங்கும் மானஸீகதர்மங்களில் தலையாய் நிற்பது அன்பு என்னும் சிறந்த குணமே. எம்மதத்தாரும் அன்பையே விசேஷமாகக் கொண்டாடிவருவதால், அன்பே சமரச சன்மார்க்க மூலமெனக் கருதப்படுகின்றது.

உலக வாழ்க்கைக்கு அவசியமாகிய மண், பொன், பெண் இம்மூன்றையும் அநுபவித்தற்குத் தக்க சாதனம் அல்லது சந்தர்ப்பம் ஏற்படாததினாலோ, போதுமானவரையில் அவற்றை யநுபவித்துச் சாந்தியடைந்ததினாலோ, அவ்வீஷணாத்திரயங்களை வெறுத்துத் தத்துவங்களை யுணர்ந்து ஆன்மஞானத்தில் ஈடுபடும் அன்பையே பக்தியென்று சொல்லுவர். இது சூன்யவாதிகளிடத்திலும் உலகாயதரிடத்திலும் தவிர ஏனைய சமயிகளிடத்திற் சிறிதாகவோ பெரிதாகவோ காணப்படுகின்றது.

உலக விஷயங்களில் தோன்றும் அன்பானது ஆன்மாக்களின் பரிபக்குவத்துக்கு ஏற்றவாறு உலகத்தனை வியாபகத்தினின்றும் தன்னளவிற் குறுகிநிற்கும். அன்பு இவ்வாறு குறுகக் குறுக அதன் அடர்த்தி அல்லது உறுதியும் (density) ஸ்திரத்தன்மையும் (Impressiveness) பலப்படும். எவ்வாறெனில், பஞ்சப்பொதியை இயந்திர உதவியால் அழுத்திக் குறுக்குந்தோறும், பொதியிலுள்ள பஞ்சு சிறிதும் குறையாமலிருந்துகொண்டே, அதன் வியாபகம் குறையக் குறைய அடர்த்தி யதிகரிக்கின்றதன்றோ?

இதனால் அன்பு என்பது சர்வப்பிராணிகளிடத்தும் எக்காலத்தும் ஒரேதன்மையாக ஏற்பட்டிருந்தபோதிலும், அவரவர் பரிபக்குவத்துக்குத் தகுந்தபடியே அது வெளித்தோன்றுகிறதென்பதும், ஜடப்பொருள்களுக்கு எக்காலத்தும் எக்காரணத்தைக்கொண்டும் அழிவில்லை என்று நவீனசாஸ்திரிகளால் சித்தாந்தப்படுத்தப்பெற்றிருக்கும் விதியே இவ் வன்பிற்கும் பொருத்தமானதென்பதும், தெற்றென

விளங்கும். அன்பே (எக்காலத்தும் அழிவில்லாததும் எங்கும் வியாபகமானதுமாகிய) சிவமென்பர் சைவசித்தாந்திகளும்.

சகல உயிர்களிடத்தும், சேய்மை அண்மையென்னும் வேற்றுமையின்றி வியாபித்துக் காரணமின்றியும், தன்னயம் கருதாமலும், மனப் பூர்வமாயும், சுயமாயும் உதிக்கும் பற்றுதலுக்கு அருள், கருணை, கிருபை, தயை, இரக்கம் என்னும் பெயர்கள் கூறப்படுவனவாகும். இதுவே அன்பின் விரிந்ததும், அடர்த்தியற்றதும், நிலையற்றதும், தோன்றிமறையக்கூடியதுமாகிய நிலையாம். இந்நிலையில் அன்பு முதிர்ந்தால் ஜீவகாருண்யத்தில் விளங்கும். இதனைக் கைக்கொண்டவர் சாந்தம் அல்லது பொறைமையுடைய பெரியோராவர்.

நற்குண நற்செய்கையுடையோர் யாவரிடத்தும் அருள் அல்லது கருணை அல்லது கிருபை உதிக்கும். தயை என்பது முன் பின்னறியாதவரிடத்துச் செல்லும். நற்குணமும் நன்னடத்தையுமில்லாத தாழ்ந்தோரிடத்துக் காட்டுவதே இரக்கமாகும்.

மித்திரரிடத்தும் சேய்மையாகிய உறவினரிடத்தும் ஏற்படும் உள்ளப்பற்றே சிநேகம், நட்பு அல்லது நேயம் என்று கூறப்பெறும். இதன் வியாபகம் முன்னையதைவிடச் சற்றே குறைந்திருப்பதற்கேற்ப, இது சிறிது அதிகமாகிய அடர்த்தியும் ஸ்திரத் தன்மையும் உடையது.

அன்பை இன்னும் சற்றே குறுக்கி நோக்குமிடத்து, அது பெற்றோர் சகோதரர் பிள்ளைகள் முதலான நெருங்கிய பந்துக்களிடத்தில் இன்னும் அதிகமாகிய அடர்த்தியுடையதும் நிலைநிற்கக்கூடியதுமான பட்சம் அல்லது பிரியம் அல்லது தாட்சண்யமாகத் தோன்றும்.

ஸஷுத்திரயங்களில் ஆணுக்குப் பெண்ணினிடம் அல்லது பெண்ணுக்கு ஆணினிடம் தோன்றும் இச்சையானது காமம், மோகம், காதல், மையல், விரகம், ஆர்வம் என்னும் பற்பலநாமங்களால் வழங்கப்பெற்றபோதிலும், இவற்றின்பொருள்களில் ஒன்றுக்கொன்று வேற்றுமையில்லாதிருக்கவில்லை.

யாதொருவித வரையறைக்குமுட்படாமல் ஒரு தலையாய்த் தோன்றும் மாம்ச இச்சையே காமம் எனப்படும். யௌவனம்,

வனப்பு, குணம், கல்வி, இவற்றுள் ஒன்று அல்லது மேற்பட்ட குணங்களால் வரையறுக்கப்பட்ட, (ஆனால் நிலையில்லாது தோன்றி மறையக் கூடிய) இச்சையே மோகம் என்பதாம்.

யௌவனம் முதலியவற்றில் சமமானவரென்று பரஸ்பரம் அங்கீகரிக்கப்பெற்ற ஆண் பெண்கள் ஒருவரையொருவர், பிறிதொருவரையன்றித், தம்மைத் தாமே, எதிர்பாராவண்ணம், மனப்பூர்வமாக நேசிப்பதுதான் காதல்கொள்ளுதலென்று மேதாவிகளாற் சிறப்பித்துக் கூறப் பெற்றிருக்கின்றது. இதனால், கற்பனைக்கதைகள் புனைவோர் சிலர் காதலுக்கு "உண்மை" என்னும் அடைமொழி கொடுத்தலானது அதற்கு இயற்கையாயுள்ளபொருளை விளக்குவதன்றி, வேறு விசேஷப்பொருளைத் தரற்பாலதன்று. பொய்க்காதலொன்று உலகத்தி லில்லையன்றோ?

ஆன்மஞானத்தில் பக்தி எவ்வாறு சிறந்ததோ அவ்வாறே இவ்வுலகவாழ்க்கையிற் காதலும் சிறந்ததாகும். இவ்விருவகையான அன்பிலும் உன்னதபதவியை யடைந்தோரது லக்ஷணங்கள் ஒரு சிறிதும் வித்தியாசப்படுவதில்லை. இருவரும் ஒரேவிதமாகவே மெய்ம்மறந்து, செயலற்று, ஆநந்த பரவசமெய்தி, இரண்டறக் கலக்கின்றனர். இவ்விதம் இரண்டறக் கலப்பதையே இன்பம் என்று பொதுவாய்ச் சொல்லுவாரானாலும், பக்தியால்வருவது பேரின்பமெனவும், காதலாற் பெறுவது சிற்றின்பமெனவும் வகுத்திருக்கின்றனர். ஆனதால் பக்தியும் காதலும் பூகோளத்தின் வடதுருவமும் தென்றுருவமும் போன்றனவென்றுகூறுவது பொருத்தமாகும்.

காதலர்கள் மணந்து இல்லறம் நடாத்திவருங்கால், ஒவ்வோர் சமயத்துத் தோன்றும் மாம்ச இச்சையே மையல் எனப் பெயர் பெறும். இம் மையல் அதிகரிக்கின், விரகமாகும். இந்த மாம்ச இச்சையைப் பூர்த்திசெய்யும் சமயத்தில் உதிக்கும் உணர்ச்சியை ஆர்வமெனக் கூறலாம்.

ஒருதலையாய்த்தோற்றும் அன்பு பிரகாச மடைவதில்லை. அன்புக்குச் சமமான எதிரன்பு தோன்றாவிடின், அது நாளாவட்டத்தில், தேய்ந்து இறுதியில் மறைந்தேபோகின்றது. இந்நிலையில் மனம்

சற்றேறக்குறைய வெறுமையாகவிருப்பதால், அதில் தன்னையன்றிப் பிறிதொருவரிடத்துப் பற்றுதல் தோன்ற இடமின்று. இம்மார்க்கத்தில் அன்புங்குறுக்கமடைந்தோர் ஏனைய ஜீவர்களின் சுக துக்கங்களிற் கலப்பதுமில்லை, கவலை கொள்வதுமில்லை; அவற்றால் இவர்கள் சலனமடைவதுமில்லை. ஆதலால் உலகத்திற்குரிய சுகமும் துக்கமும் இவர்களைப் பாதிப்பதில்லை எனச் சொல்லலாம்.

பரஸ்பரமாகிய அன்பை அதன் விரிந்தநிலையினின்றும் குறுக்க எத்தனிக்குந்தோறும் அச்சமும் கவலையும் துக்கமும் உண்டாகின்றன. ஆனால் இவ்வாறு குறுகிய அன்பும், எவ்வளவுக்கெவ்வளவு மிருதியாகக்காணப்படுகின்றதோ—எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகப் பிரதிபலிக்கின்றதோ, (அதாவது இருதலையுமொத்ததாகத் தோன்றுகிறதோ) அவ்வளவுக்கவ்வளவு மிருதியான ஆழமும் உறுதியும், சிறப்பும் உடையதாகும். இவ்வன்பு இலாபத்தையொழித்த ஏனைய வழிகளிற் குறுகுவதனால் உண்டாகும் பயமும் விசாரமும் சஞ்சலமும் எதிரன்பின்வன்மையினாலேயே ஒருவாறு தகையப்படுகின்றன.

தன்னளவிற் குறுகும் அன்பு இலாபம் ஒன்றையே பற்றிச் செல்லும். இந்நிலையில் அன்பு என்னும் சிறந்த பெயர் போய், அதற்குப் பிரதியாக அது தன்னயம் அல்லது சுயநலம் என்று வழங்கப்படுகின்றது. இவ்வன்பு பிரதிபலிப்பதற்கு இடமின்மையால், இக்குறுகிய அன்பினின்றும் உற்பவிக்கும் பற்பல குண தோஷங்களும் உற்பாதங்களும் எதிரன்பினால் தடைசெய்யப்படாததால், இப்போது தான் மெதுவாகத் தலையெடுக்கின்றன.

அன்பானது சுயநலம் என்னும் பிரத்தியேக இடத்தைச் சாருங்காலையில், மண், பொன் இவற்றில் அவா உதிக்கின்றது. இதனையே மண்ணாசை பொன்னாசை யென்பர். இவை தரித்திரர், மத்தியதரத்தர், தனவந்தர் என்னும் பேதமின்றி யாவரிடத்தும் சாதாரணமாய்க் காணப்படும். ஏனெனில் அஷ்டபோகங்களில் பெண் ஒன்று நீங்க ஏனைய எழுவகைப்போகங்களும் இம் மண் பொன்களினாலேயே அநுபவிக்கக்கூடியனவாயிருக்கின்றன. ஆனால் இவற்றைப் பெறுவதி

னிமித்தம் மனிதன் பலவித கஷ்டங்களை யநுபவிக்கிறானென்பதும் அநுபவ சித்தமே.

மண், பொன் ஆகிய ஜடப்பொருள்களின்மீதுள்ள அவா வெளித் தோன்றாது கரந்துறையும் ஆரம்பமாகியநிலையில் அது அநுராகம் அல்லது விருப்பம் எனப் பெயர்பெறும். வெளிப்பட்டாலோ, அதனை ஆவல் அல்லது வேண்டல் என்று சொல்வர்.

ஒரு பொருளிடத்து அதிகமாகிய அவா ஏற்படின், அது பேரவா அல்லது பேராசையாகும். இப்பேராசையானது, முன்னமே பொருள்களை ஏராளமாய் உடையராய் அவற்றையநுபவித்துக் கொண்டிருப்பவரிடத்தே மிகுதியும் காணப்படுகின்றது. வறியோரும் நடுநிலைமையோரும் பேராசையைக் கைக்கொள்வதினால் தாம் பயனடையப் போவதில்லையென நன்குணர்வாராதலின் இவர்களிடம் இக்குணம் அரிதாய்க் காணப்படுகின்றது.

பேரவாவினின்றும் உலோபம் ஜனிக்கின்றது. உலோபகுணத்தைமட்டுமுடையோர் தமக்காவது பிறருக்காவது பயன்படுபவரல்லர். அன்றியும், அன்னவர்களால், பிறர்க்குத் தீங்கும் ஏற்படுவதற்கேதுவில்லை. ஆனதால் உலோபியானவன் மனிதவர்க்கத்தில் ஒருவனாகக் கருதப்படுவதில்லை.

உலோபத்தினின்றும் ஒருபடி கீழிறங்கினால் அழுக்காறு, ஔவியம் அல்லது பொறாமையிற் கொண்டுவிடும். இதன்பயன் மூதாட்டியாகிய ஔவையாரால் நான்குபதங்களில் நன்குவிளக்கிக் கூறப்பட்டுள்ளது. தீயகுணங்களென்றுசொல்லப்படும் யாவற்றிற்கும் பிறப்பிடம் இதுவே யாகும்.

பொறாமையினின்றும் வெறுப்பு உண்டாகும். வெறுப்பு முதிர்ந்தால் கபடம், சூது, சூழ்ச்சி, தந்திரம், மாயம் அல்லது வஞ்சனையாக மாறும். இக்குணத்தையுடையோரைப் பொய், களவு, குறளை, (அல்லது கோள் அல்லது கௌவை) இவையும் பற்றிக்கொள்ளும். இவை யாவும் வெளித்தோன்றாது மறைந்திருக்கும் கொடிய குணங்களாம்.

அடுத்த கீழ்ப்படியில் ஏமாற்றம் அல்லது மோசம் நிற்கின்றது. இதற் குறவான துர்க்குணமாவது அபவாதம், இழிசொல், ஏசல்,

பழிமொழி என்னும் பிரதிபதங்களைக்கொண்ட பஹிரங்கமாகிய அவதூறாகும். ஏமாற்றமானது கபடத்தைவிடத் தாழ்ந்தபடியினின்ற போதிலும், முன்னையதைவிடப் பின்னையதே ஜனசமூகத்துக்கு மிகுந்த தீங்குவிளைவிப்பதாகும்.

இனித் தாழ்ந்தபடிகளை நோக்குமிடத்துப், பிரதமத்தில் அகங்காரம் அல்லது மமதை புலப்படும். இதனிடத்தினின்றும் வெகுளி யுதிக்கின்றது. இவ் வெகுளி வெகுசீக்கிரத்தில் தோன்றி மறையும் தன்மையுடைத்து. இது முதிர்ந்து ஸ்திரத்தன்மையடையுங்கால், கறுவு, குரோதம், சினம், அல்லது முனிவு என்னும் பெயர்களால் விளங்கும். சினத்தை யாதரிப்போர் கயவர், கீழ்மக்கள், தீயோர் என்று இகழப்படுவர்.

சினத்தை யேற்றோரிடத்து அடிக்கடி தோன்றும் அக்குணத்தின் உச்சநிலையே கோபம் அல்லது சீற்றம் எனப்படும். பக்தியையும் காதலையும் கைக்கொண்டவரைப்போலவே, கோபத்தினால் பிடிக்கப்பட்டோரும் மெய்ம்மறந்து செயலற்றுப் பரவசமெய்துகின்றனரானாலும், பக்தர்களையும் காதலர்களையும்போல், கொடிய கோபிகளுக்கு எய்தும் பரவசம் ஆநந்தத்தாலுறுவதுமில்லை; இவர்கள் இரண்டறக் கலப்பதற் கிடமுமில்லை.

சினமும் கோபமும் மனுஷவர்க்கத்தைவிட இழிந்த ஜீவப்பிராணிகளுக்கும், மனுஷவர்க்கத்திலேயே தாழ்ந்தபடியிலுள்ள வனவாசிகளான முரடர்களுக்கும் (Savages) உரியவை. இவற்றால்வருவது பகை அல்லது விரோதமும் சதாகால துன்பமுமே. அறிவு முதிர முதிர இந்நிலையினின்றும் மானிடர் அன்பு என்னும் பற்றுக்கோலின் உதவிகொண்டு மேனோக்கிச் சென்று, இறுதியில் அழிவிலா இன்பத்தைப் பெறுகின்றனர்.

அறிவாளராயுள்ளோர் தன்னயம் பாராட்டியவிடத்தும், பேராவா முதல் சீற்றம் ஈறாகக் கூறப்பட்ட தூர்க்குணங்கட்கு இடங்கொடாது; தமது ஞானதீபத்தினா லுதவப்பெற்ற கிரணங்களாகிய உபாயத்தினாலும், சாதுர்யத்தினாலும் உலகத்தோடொத்துவாழ்வ

தையே இலக்யமெனக்கொண்டு, உயர்ந்தோர்நடையைப் பின்பற்றிப் பெரும்பாலார்க்கு இணங்கி, இசைந்து, உடன்பட்டு அவர் சம்மதம்போல் நடப்பர்.

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்."

V. V. இராஜரத்தினம்.

---

உ

## கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் செய்த முடிவுகள்.

---

இரௌத்திரி யாண்டு ஆவணித்திங்கள் கூ-ம் நாள், தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டுத் திருவிழாத் திருநாளில், தூத்துக்குடி, திருவாளர் எஸ். சோமசுந்தரபாரதியார் அவர்கள், எம்.ஏ., பி.எல், தலைவராகக் கூடியிருந்த தமிழர்கள் ஒருமித்துச்செய்த முடிவுகள்.

க. கோல்கோணாது தங்களைப் புரந்துவரும் மிகுமாட்சி தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் மன்னருக்கு இப்பெருங்கூட்டத்தார் தங்கள் கோப்பற்றுணர்வைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

உ. செந்தமிழ், ஆரியம், ஆங்கிலம் முதலிய மொழிகளைக் கற்றுணர்ந்தடங்கியவரும், தமிழ்மொழிவளர்த்தலே தம் கடனாக்கொண்டவரும், நன்னெறியொழுகிய இன்னிசைச்செல்வரும், இச்சங்கந்தோன்றியநாள்தொட்டு இதனைப் பேணிப் புரந்தாருமாகிய அரித்துவாரமங்கலம், திருவாளர் வாசுதேவ கோபாலசாமி இரகுநாத இராசாளியார் அவர்கள் உடலொழித்து இறைவனடி சேர்ந்தமை பொதுவில் இத் தமிழ்நாட்டிற்கும், சிறப்பில் இச்சங்கத்திற்கும் பெருங்

குறையே யாகும்; அவர்கள் இப்பொழுது புறக்கண்களுக்குப் புலனாகாது போயினராயினும், அவர்களது அன்பு உள்நின்று தமிழர்களையெல்லாம் ஆட்டிவைக்குமென்றே இப்பெருங்கூட்டத்தார் நம்புகிறார்கள். அவர்களது திருவுருவை என்றுங்கண்டு மனவெழுச்சிபெறும்பொருட்டு அன்னார் திருவுருவப்படம் பெரியதொன்று சங்கத்தில் அமைத்துக்கோடல்வேண்டுமென்று யாவரையும் கேட்டுக்கொள்ளுகின்றார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

௩. தமிழ்த்தாயின் உண்மைத் திருமகாருள் ஒருவராய்த் தோன்றி, உண்மைத்தொண்டுகள் பலவாற்றி, மேனாட்டாரும் தமிழருமை உணரச்செய்த மதுரைத் திருவாளர் ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்., இறைவன் திருவடி எய்தியமை குறித்து இப்பெருங்கூட்டத்தார் பெருந்துயரடைகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

௪. எவ்வளனும் இனிது வாய்ந்துள்ள தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழிவரிசையிற் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று பலமுறையும் சென்னைப் பல்கலைக்கழகத்தாரை வற்புறுத்தியும், அவர்கள் இன்னும் அவ்வாறு செய்யாமலும், கட்டாய பாடமாக ஏற்படுத்தாமலும் இருப்பது பிசகென்று அறிவிப்பதோடு, இனியாவது அவர்கள் தமிழை உயர்தனிச் செம்மொழியாகக்கொள்வதுடன், கட்டாய முறையாகவும், கூடியவரை கல்லூரிகளிற் கலைபயில் கருவிமொழியாகவும் கொண்டு தங்கள் முதற்கடமையைச் செலுத்தும்படி அவர்களை இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்

வி. ஏ. சகராயப்பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்.

வழிமொழிந்தார்—திருவாளர்

ஐ. குமரசாமிபிள்ளை அவர்கள், பி.ஏ.

௫. சென்னைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்மொழியின் நலத்தையும், உரிமையையும் பேணுவதற்காகத் திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்களை பி.இ., எம்.சி.ஐ., மேற்கழகத்தின் உறுப்பின

ராக்கவேண்டுமென்று பலமுறையும் தமிழர்கள் பலராலும் கேட்டுக் கொள்ளப்பட்டும், இக்கரந்தைத் தமிழ்ச்சங்கத்தாராலும் சென்ற ஆண்டுத் திருவிழாக்காலத்தும் பின்னரும், இன்னும் மற்றச் சங்கங்களாலும் வற்புறுத்தப்பட்டும், இன்னும் அவ்வணியார் நீந்தல் சரியல்லவென்று காட்டி, இனியேனுங் காலந்தாழ்க்காது, உண்மைத் தமிழ்த்தொண்டுபுரியும் திருவாளர் நாயக்கர் அவர்களைப் பல்கலைக் கழக உறுப்பினராக்கவேண்டுமென்று அக்கழகத்தலைவர் அவர்களையும், சென்னை ஆட்சியாளரையும் மீண்டும் இப்பெருங்கூட்டத்தார் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்,

பண்டிதர், எல். உலகநாதபிள்ளை அவர்கள்.

வழிமொழிந்தார்—திருவாளர், சாமிராவ் அவர்கள், பி.ஏ.

௬. பொதுப்பெயர்களையும், சிறப்புப்பெயர்களையும், பிறசொற்களையும், அரசாட்சியாரும், இருப்புப்பாதைக்காரரும், பிறரும் தம் மனம்போனவாறெல்லாம் எழுதிவரல் தமிழியல்புக்கு முற்றிலும் மாறுபடுவதுடன், மொழியின் சிறப்புநிலைக்கு இடுக்கண்விளைப்பதும், அவ்வச்சொற்களது வரலாறு மறைந்தொழியப்பொருட்டாவதுமாயிருத்தலால், இனிமேல் ஒழுங்காக எழுதும்படிக்கும், தாமே ஒழுங்காக எழுதமுடியாவிட்டால் தமிழ்ப்புலவர்களையாவது, தமிழ்ச்சங்கங்களையாவது கேட்டறிந் தெழுதும்படிக்கும் இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்

எம். எஸ். கல்யாணசுந்தரமையர் அவர்கள்.

வழிமொழிந்தார்—திருவாளர்

என். சீதாராமபிள்ளை அவர்கள்.

௭. இலக்கணமுறை பிறழ்ந்தும், பிறமொழிப்பெயர்களைத் தமிழியைபுக்கேற்பத் திருத்தாமலும் உரைநூல்கள் எழுதுவதும், அந்நூல்களைப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், பாடமாக வைப்பதும், தமிழ்மொழிக்கும், அதனைக் கற்போருக்கும் பேரிடர்விளைக்குமாதலால், பணம் ஒன்றையே கருதி அவ்வாறு எழுதாவண்ணம் புல

வர்களையும், அத்தகைய நூல்களை ஒப்புக்கொள்ளாதபடிக்கும், ஒப்புக்கொண்டுள்ளவற்றி லுள்ள குறைகளை உடனே மாற்றும்படிக்கும் சென்னைப் பல்கலைக் கழகத்தாரையும், பொதுக் கல்வித்தலைவர் அவர்களையும் இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்

அ. சாமிநாதபிள்ளை அவர்கள்.

வழிமொழிந்தார்—திருவாளர்

அ. பாலகிருட்டிணபிள்ளை அவர்கள், பி. ஏ.

அ. கல்லூரிகளிலும் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் தமிழ்க் கணக்காயர்களாயுள்ளவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் பிறகணக்காயர்களது ஊதியத்தோடு ஒப்ப நோக்குமிடத்து மிகவும் குறைந்ததாயிருக்கின்றது. உழைப்பினாலும் அறிவினாலும் மற்றைய கணக்காயர்களுக்குத் தமிழ்க்கணக்காயர்கள் ஒருவகையிலும் தாழ்ந்தவர்களாயில்லாதிருந்தும் அவர் ஊதியம்மட்டும் குறைவாயிருப்பது தமிழ்மொழியையும், அதனைக் கற்போரையும் மதியாமையும், தளரப் பண்ணுவதுமாமாகையால், இனிமேல் மற்றைய கணக்காயர்களுக்கொப்பத் தமிழ்க் கணக்காயர்களுக்கும் தக்கபடி ஊதியமுறை ஏற்படுத்தவேண்டுமென்று இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்.

வழிமொழிந்தார்—திருவாளர்

வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள்,

கூ. உண்மையான தமிழ்த்தொண்டுகள் பல செய்துவரும் மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்குத் தீயினால் விளைந்த இடையூற்றுக்காகப் பெரிதும் உளங்கவல்வதோடு, அச்சங்கத்தை நன்னிலையிலுய்ப்பதற்காகத் தம்மாலியன்ற உதவி செய்யும்படி தமிழர், தமிழன்பர் எல்லாரையும் இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்

௰. தமிழகத்திலுள்ள பெருமடங்களின் தலைவர்கள் தங்கள் பொருட்பெருக்கின் ஒரு சிறுபகுதியையேனும் தங்கள் கடமையாகிய தமிழ்மொழி வளர்ச்சியிற் செலவிடுவார்களாயின் பெரும்பயன் விளையுமென்று அன்னோர்களைப் பன்முறை கேட்டும் அவர்கள் வாளாவிருத்தல் மிகவும் கவலத்தக்கதாயிருக்கிறது. இனியாவது அவர்கள் தங்கள் கடமையையோர்ந்து தமிழ்மொழிமேம்பாட்டுக்கு ஆவன செய்யும்படி அவர்களை இப்பெருங்கூட்டத்தார் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

௰௧. பிறமொழி நூல்களையும், கலைகளையும் தமிழ்மொழியிலாக்கிக்கொள்ளுவதற்காக வேண்டிய சொற்களைப் பெருக்கவும், ஆக்கவும் தக்க புலமைவாய்ந்த தமிழறிஞர்கள் கூடிய ஒரு கழகம் கூட்டும்படிக்குத் தமிழ்ச்சங்கங்களையும், தமிழறிஞர்களையும் இப் பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

கருந்திட்டைக்குடி,
இரௌத்திரி, ஆவணி, ௨௨

பா. கல்யாணசுந்தரம்,
அமைச்சர்.

---

# தனிநிலைச்செய்யுட்கோவை.

(௩௪௦-ஆம் பக்கத்தொடர்ச்சி)

---

47. வன்மைபெற விழைஇ வாய்விடக் கருந்திப்
போர்வேட் டொருவன் போதல் போலும்
குழவிவேட் டொருவள் குறுகுபு போதி
நிழல்வலம் வந்தாங்கு நின்றடி யகட்டை
வருடி நோக்கிய மடவால் போலும்
ஈரெழுத் துப்பயின்ற வேழையர் நான்மறைப்
பார்ப்பா ராகப் பதைக்குந ரம்மா
இவரே, மரபுமர பாக அகத்தன புறத்தன
ஏற்ற பெற்றியவா இயைந்து வந் தார்க்கே

ஆற்றல்சா லன்னவை யாதலறி கிலரே
புறத்தன சூழ்ந்த அந்தணர் தம்முளும்
இழிந்தன ருளரே யிழிந்தோர் தம்முளு
மஃதே மான வந்தணர் மறைகுந
ராதலிற் றிணைக்காப் பறஞ்சிறந் தன்றே
என்குநர் புலாலை மேலோ ரென்னினும்
இழிந்தோ ரியைத்த வின்சுவைப் பண்டங்
காண்டருந் தற்குங் கயப்புக் கோடல்
காண்டிலர் கொல்லோ வீண்டிய புதுமையர்
நீறு பூசலும் நீரிடை மூழ்கலும்
பெறுதரு கடவுளை வடிவிடைப் பேணலும்
கூறை தூய்தாக் கோடலும் பிறவும்
ஆறு கிலையே அகத்தொழுக் கிற்கே
இதனன், அகத்துப் பயில்விற் கணைமுத லாகிப்
புறத்துப் பயில்வும் பொன்னைப் பாகும்
இனியே, ஒருகுடிப் பிறந்தோர் தம்முள் ளொருவர்
மேம்படிற் றமக்கது மேம்பா டன்றே
அண்ணன் றம்பி அரும்பெறற் சேஎய்
நண்ணிய பெற்றோர் நலஞ்சிறந் தக்கா
லவரொடு பொருத லழகா குங்கொன்
மேம்பட் டோரை மேனிலைச் செயலுள்
ஆம்படி வைத்தற் கறியா ராகித்
தாம்பொறுக் காமற் றபுக்குந ரவர்நிலை
யென்றுகொ னம்மனோ ரிணைந்து
நன்றிபல வுமிஇ நயந்துவளர் நாளே.

48. உலகிடை விளைந்த வுணவின் றொகுதியை
யவமே யழித்தற் கியொருந் துணிகில
ரிருவயிறு படைத்தோ ரீண்டொருவரு மிலரே
யாதலி னமக்கமை வனவிரைந் தனையு
மெனக்குறித் திருக்கு மினிமையறி கிலரே
தொழிலறவு படாமற் றோன்றுதற் கன்றே
பொருள்கொண் டாடை பொருவில்பல் பண்டம்

விற்குது மென்ற விலைஞரு முண்டுகொல்
பலப்பல பண்டம் பார்கொள் கருவியாம்
பணத்தினைக் கவர்ந்துமறை பதர்களிலை யெவன்கொல்
பல்லோர் கூடியொரு மல்லனைப் பாற்றுவர்
எல்லோரு மிணைந்து கூடலிருந் தின்றமிழ்
வல்லாங் காய்ந்த வடிபுலப் புலவருள்
ஒருவர்க் கிணையா வுயர்குவர் கொல்லோ
விவ்விவ் வகையா விவ்விவை யிவர்க்கிவர்க்
கீந்தனங் கடனு வெனவேட் டெழுதித்
தாஅந் தருக்கித் தழைசெல் வோரெனச்
சாந்துணை வரையிற் சார்நற் கறிவிலர்
நரையே திரையே மூப்பே பிணியே
கருதுசாக் காடே யின்னன கதுவுறாஉ
நாற்றவுடற் காளா நயந்து தருக் குறுவோ
நறுமண வுடல நாள்பல நண்ணல்
பெறுதிரு பிறவும் பெற்றன மெனினே
யெத்துணை வீறுற் றேமாப் புறுவோம்
பார்நடை முற்றும் பயின்று
மார்கொ வின்னவை யறிந்து நடக் குநரே.

49. பாடல்சால் பனுவல் சிறுவிலைக் களிக்குழிப்
பீடறி வொருவன் பெரும்பொருட் கேற்றிடின்
அன்னோ னுலகி னெவ்வா றமைகுவன்
அஃதே மானத் தமிழறி செல்வரும்
கல்வியை வயிற்றுக் காப்பிற் கமைத்துப்
பல்வினை தவிர்ந்து பதைபதைப் புறீஇய
தமிழ்ப்புல வோர்க்குத் தக்கவொன் றுற்றிலர்
இவருந் தம்மவாச் சுருக்கி யினிதமைந்
தமர்மனைக் கடைவா யணையா திருக்கிலர்
உழவுமுத லாய பற்பல வினைஞரும்
வாணிப வாணரும் மன்னும் பிறரும்
ஏற்ற பெற்றி யின்றமி ழாய்ந்த
பின்ன ரத்துறை பேணுபு பயின்று
நன்னர்பெற் றுய்ய முத்தமிழ் நாட்டின்
வேளாண் வாழ்க்கையர் தாளாண்மை செய்திலர்
அற்பி லாய்தொடிப் பரத்தையர்க் காளாய்க்
கற்புக் கடன்பூண்ட பொற்புடைக் கடவுளைக்
கண்வழிச் செந்நீர் கரைந்துகக் கடுகுந்
திண்மைகொ ளிருப்பு நெஞ்சத் திருடனி
னுவ லோரையும் நற்றமிழ் நாடிய

பாவ லோரையும் படுத்தழிக் குநரே
இவ்வா றியற்றுநின் சேய்களியல் பறியாய்
துஞ்சுதி யின்னந் துஞ்சுதி
செஞ்சுவைப் பனுவலணி செந்தமிழ்த் தாயே.

50. மக்க டாமே வேண்டுவ வகைபுரீஇத்
தொக்கு மகிழ் தூங்கித் துலங்குநரிவரே
தமக்கின்றி யமையாத் தன்மைய வற்றைப்
போற்றுநர் பகைதமைப் பொருதழிக் குநரே
யேனைய வற்றை யெவன்கொல் செய்குவர்
புன்முத லாய நிலையுயிர்ப் பொருளு
மெறும்பு முதலாய வியங்குயிர்ப் பொருளு
மெவன்கொல் புரியும் யாவர்தாம் புரக்குநர்
சோறுபொதி தேங்காய் துணைக்கோ லிவற்றைக்
கண்டன குரக்குக் குழூஉவுட் சிலவே
தேங்கா யகத்தொரு கையிடுபு சிகையைப்
பிடித்துவிடா திருந்தன சிலவே யங்ஙன
மிரட்டைக் கையினு மேற்றுவிழித் தனவே
சிலவே கோலிரு கைக்கொடு சிறந்தன
சோற்றைப் பெறுதன பெற்றன நோக்கிப்
பொறு வாகிப் பொருதுகொட் டாங்குமன்
னொருசார் வேந்துங் குடியு முறழ்குநர்
கழுத்திடைப் பிடித்துக் கண்டுகண் டஞ்சிப்
பின்னுற மறைஇப் பாம்பழி காறும்
பிடிப்புவிடா தலைக்கும் பேதைக் குரங்கி
னொருசார் வேந்தர் குடிகளை யொறுக்குநர்
யாண்டுப் புகையோ வாண்டுத் தீயென
வீண்டிய வளவைபு மெண்ணெழுத் தியற்கை
நண்ணி யோரே கண்ணுடை யவரே
நண்ணி லோரே புண்ணுடை யவரே
கண்ணிய கற்பி னேற்றக் கவினையுந்
தன்னெறிச் சேவைத் தமிழ்வளர் பெரியோன்
பொன்னே யென்னத் துன்னுப் பயிற்றல்
கண்டனன் செல்வன் கருத்துட் பிடித்தாங்
கொருபகற் கண்ணே யுறீஇவரு மாசாற்
கண்டுகளி மிஞ்சுபு வாடிக் கண்ணு
னொண்டொடி மாட்டுங் கண்ணிலை யுணர்ந்தனன்
றண்டமி ழாசான் றன்னைக் கூஉய்
நீயே தமிழ்நிலை யென்னு மறிகிலையே
புண்ணமைம் கண்ணை யாத லானே
யானே தமிழறி வுடையேன் கேண்மதி

புண்ணில் கண்ணின னூத லானே
என்றன னெய்ப்போர் புலவரை யிகழுந
ரொருசா ராரே சீட்டாட் டுழீஇ
யெச்சீட் டிடினுமீண் டினிநல னின்றென
வுச்சிநோக்கி மயங்கி யுலைந்து வாடியோன்
பக்கலிடை யுறைவோன் பன்னிப் பன்னி
பலபடி யுன்னுதி பண்பறி கிலையோ
வொருசீட் டிறக்கக் கொருசீட் டிடுதலு
மறிகிலை யென்னே யவ்வச் சீட்டுப்
பெறுகிலை யென்னப் பீடழித் துறழே
லீண்டுக் கிடப்பவை யெண்ணில்பல் வகைய
வென்றறி வுறுத்தியோற் கினியவரொரு சாரார்
இத்தகைப் பலர்தம் மிருப்பான்
முத்தமிழ் நாட்டின் முறைசிறந் ததுவே

---

## தனிநிலைச்செய்யுட்கோவைக் காப்பு.

---

மாபுவரு தற்கு மன்னுமற முதல
திருவரு தற்குந் தேர்ந்துபடைத் திட்ட
வாடூஉ விழையு மகடூவு வடிவு
மகடூஉ விழையு மாடூஉ வடிவு
நரைதிரை மூப்பே மலிவுறு பிணியே
யென்றற் றொடக்கத் திவைகூடி யொருவர்
ஒருவரை யுவர்த்திடு மாறீண் டுஞற்றிய
மினியவ் விருவோரு மினிதுவிழை யுறுப்பினைத்
துனிதரு நாற்றந் துதைவுறப் புரிந்து
மனைய வெனினு மவற்றைவெறுக் கிலராய்க்
கனிவுகொடு வேட்பக் காத லுறுத்தியும்
வருதிற னவ்விரு வகையோரு ளொருவர்மற்
றொருவரை மதித்தாங் குவுந்தவந் தேத்தி
மண்வா வறியார் வாணாள் கழிப்பிப்
புண்வரு துயரைப் பொருந்தாது நடுநிலை

பொருந்திப் பிரிதுயர் போக்கி யிருமைநலந்
திருந்திச் செம்மை சேர்தற் கெனூஉ
வொருத்தன் பிறனுக் கூறுசெய் வழியுந்
திருத்தகு நல்லோன் றீமையடை வழியும்
வருத்திடும் புலையோ னன்மைபடை வழியு
மொன்றைமற் றொன்று பொருஅ வாகிக்
கொன்றுந் தின்றுங் கொடுமைபுரி வழியும்
மன்பதை யுள்ளான் மாற்று ணுகி
னன்னவன் றன்னை யவ்விபெவன் மதிக்கு
மஃதே மானக் கடவுளமை குநரெனும்
புல்லே முளத்திற் போக்கறாஉம் வண்ண
நல்லுபி ரழியா நண்ணுமெய்ம் முதல
வொல்லுவ வெல்லா முடுக்கைக் கொப்ப
நல்கியுங் களைந்து நயந்துவரு தும்மெனூஉச
சொல்லியாங் குணர்த்தியுந் துறைப்படுத் தாண்ட
செல்வனைக் கல்விச் செழுங்குணக் குன்றினை
யேத்தி னோர்க்கு மிகழ்ந்துவை தோர்க்கும்
பாத்திட் டளிக்கும் பண்பமை கொடையனை
நாத்தழும் பேற்றி நலனுறப் பணிகுதூஉ
மாத்துணர் கில்லா மதியிலே மனமாஞ்
செய்யுட் டிகழ்தமிழ்த் தனிநிலைச்
செய்யுட் கோவை செழுமைபெறற் பொருட்டே.

---

## தனிநிலைச்செய்யுட்கோவைப் பிழைதிருத்தம்.

| பக்கம். | பா. எண். | பா. வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| ா.டுக | 30 | 8 | காப்பிற் | காப்பில் |
| ௸ | ௸ | 18 | றன்றெனு | ரன்றெனப் |
| ௩டுசு | 37 | 19 | வைப்போன் | வைப்போள் |

S. வைரமுத்து,